# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 02, செவ்வாய்க்கிழமை 16.05.2017 கதிர் 191



WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641


## இனவாதிகள் இனிமேல் ஆட்சிக்கு வர முடியாது!

### உறுதியாகக் கூறுகிறார் ஜனாதிபதி



பொலனறுவை, மே 16

**சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களின் சமூக நியாயத்தை நிறைவேற்றும் அரசியல் சக்தியே எதிர்காலத்தில் ஆட்சியமைக்க முடியும் எனத் தெரிவித்த ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன, இனவாதத்துடன் பிரிந்திருக்கும் எவரும் இனிமேல் ஆட்சியமைக்க முடியாது எனவும் கூறினார்.**

அனைத்து இனங்களிலும் உள்ள பிற்போக்குவாதிகள் மக்களுக்கிடையேபல்வேறு முரண்பாடுகளை ஏற்படுத்தி, ஒற்றுமையின்மையை விதைக்க முயற்சிக்கின்றனர். அதுதொடர்பில் அனைத்து மக்களும் நுண்ணறிவுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டும் எனவும்

பக்கம் 18 >>>

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# அரசாங்கத்தை மிரட்டி அடி பணிய வையுங்கள்!

### கூட்டமைப்புக்கு சங்கரி புத்திமதி



காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் போதிய நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத்தூக்கிஎறிவோம்என்றோ அல்லது அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிப்போம் என்றோ மிரட்டி, இவ்விடயத்தைச் சாதிக்க முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில், நேற்றுஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு :-

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், எத்தனையோ புகைப்படங்கள்

பக்கம் 18 >>>



## அமெரிக்கக் குழுவினருடன் யாழில் சுமந்திரன் பேச்சு

யாழ்ப்பாணம், மே 16

இலங்கை வந்துள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் பில் ஜோன்ஸன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், எம்.பியுமான எம். ஏ. சுமந்திரனை நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பும் பங்குபற்றினார்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்கள் குறித்து இரு

பக்கம் 18 >>>

## தமிழினப் படுகொலை நினைவேந்தல் நேற்று நெடுந்தீவில் இடம்பெற்றது



(எஸ்.நிதர்ஷன்)

தமிழின அழிப்பு நினைவு வாரத்தின் நான்காம் நாளான நேற்று நெடுந்தீவில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. குமுதினிப் படகில் இடம்பெற்ற படுகொலையில்

பக்கம் 18 >>>

## ஜெனரல் சவேந்திர சில்வாவை சாட்சியாக அழைப்பதற்கு முல்லை நீதிமன்று மறுப்பு

இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை சாட்சியாக முல்லைதீவு நீதிமன்றுக்கு அழைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை முல்லைத்தீவு நீதிபதி நிராகரித்துள்ளார்.

இறுதி யுத்த காலத்தில் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்

பக்கம் 18 >>>

## டிராக்டரை பந்தாடிய ரயில்; இருவர் பலி!

பக்கம் 20 >>>

## இராணுவத்தை விமர்சிக்கும் விளையாட்டு வேண்டாம்!

பக்கம் 02 >>>

## வடமத்திய மாகாண முதல்வருக்கு எதிரான மகஜரை ஏற்பதற்கு ஆளுநர் பின்னடிப்பு!

### பெரும்பான்மையினர் எதிரணியிலாம்

வவுனியா, மே 16

வட மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் 33 உறுப்பினர்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களாக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களான

பக்கம் 18 >>>

## இந்திய ஹெலி தொடர்ந்தும் கண்டியில் தரிப்பு



பக்கம் 07 >>>

## இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை: ஐ.நா. கவுன்ஸில் நவம்பரில் ஆய்வு செய்யும்!

ஜெனீவா, மே 16

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை குறித்து ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் விலாவாரியாக ஆராயப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் மனித உரிமைகள் விடயத்தில் தனது கள நிலைவரத்திலும், அத்தோடு ஏற்

பக்கம் 18 >>>

## உயர் நீதிமன்ற விசாரணை முடிவடையும் வரை எம்.பி. பதவியில் கீதா குமாரசிங்க தொடரலாம்

### நீதியரசர்கள் 2 - 1 ஆகப் பிரிந்து இடைக்கால உத்தரவு

கொழும்பு, மே 16

இரட்டைக் குடியுரிமைப் பிரச்சினையைக் காரணம் காட்டித் தமது எம்.பி. பதவித் தகைமையை இரத்துச் செய்த மேன்முறையீட்டு மன்றத் தீர்ப்புக்கு எதிராக கீதா குமாரசிங்க தாக்கல் செய்த மேன் முறையீட்டை உயர்நீதிமன்றம் நேற்று விசா

பக்கம் 18 >>>

## குழப்பமான மாகாண சபைகளில் புகுந்து விளையாட ஐ.தே.க. திட்டம்?

### மத்திய மாகாணத்தில் தனிக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே 16

மாகாண சபைகளில் உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் மைத்திரி அணி, மஹிந்த அணி எனக் கன்னை பிரிந்து நிற்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தச்

பக்கம் 18 >>>

## அளப்பு அருணாசலம்



இரண்டு பெரிசுகளும் கனவிலை பேசுகினம் போலை...!

## முதலமைச்சர் பதவி

## விக்கிக்கு இனி இடமில்லை சிறீதரனை நிறுத்த முடிவாம்!

வடமாகாண சபைக்கான அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு, வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு வாய்ப்பு வழங்காமல் விடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சி.வீ.விக்னேஸ்வரனுக்குப்

பக்கம் 18 >>>

## சவ ஊர்வலத்தில் குளவித் தாக்குதல் பிரேதத்தைப் போட்டு விட்டு ஓட்டம்!

கொழும்பு, மே 16

பிரதமர் நரேந்திர மோடி ஹட்டனுக்கு வந்து திரும்பிய அதே நாளில், அதே மத்திய மாகாணப்பகுதியில் பிரேத ஊர்வலம் ஒன்றின் மீது குளவிகள் உக்கிரமாகத் தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

புசல்லாவைப் பகுதியில்

பக்கம் 18 >>>

# இராணுவத்தினரை விமர்சிக்க எவரையும் அனுமதிக்க முடியாது!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விஜேயவர்த்தன கூறுகிறார்



வடக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் தலைமைகள் இராணுவத்தினர் மீது குற்றச் சாட்டுக்களை முன்வைத்தாலும், இராணுவத்தினர் தமது பொறுப் புக்களை ஏற்றுக் கடமை புரிந் துள்ளனர். எனவே வடக்கில் முப்படையினருக்கு எதிர்ப்பு வெளியிட அனுமதிக்க முடியாது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேய வர்த்தன தெரிவித்துள்ளார்.

அரநாயக்க பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

வடக்கிலுள்ள சில அரசியல் வாதிகள் தொடர்ச்சியாக எமது இராணுவத்தினரை விமர்சிக் கின்றனர்.

அவர்கள் பல்வேறு குற்றச் சாட்டுக்களை முன் வைத்தாலும் இராணுவத்தினரின் சேவையைப் பாராட்ட வேண்டிய அளவுக்கு அவர்கள் பொறுப்புடன் செயற் பட்டுள்ளனர்.

சிவாஜிலிங்கம் ஐவருடன் நின்று விளக்கேற்றி இராணுவத் தினரை விமர்சிப்பது கவலைக் குரியது. எனினும், இந்தச் சுதந் திரத்துக்கு முப்படையினரே காரணம் என்பதை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன், இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றுள்ள தமிழர்களின் பணத்தைப் பெறுவதற் காகவே அவர் இப்படியான நாடகத்தை நடத்துகின்றார்.- என்றார். (எ)

## கேரளக் கஞ்சாவுடன் 18 பேர் கைது

மினுவாங்கொடை பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த 18 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கம்பஹா போதைப் பொருள் தடுப்புப் பிரிவி னருக்குக் கிடைத்த இரக சியத் தகவலின் அடிப் படையில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்கள் கம்பஹா பதில் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.

அதையடுத்து அந்த 18 பேரும் தலா 15 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு பதில் நீதி வான் அதுல குணசேகர உத்தரவிட்டார். (எ)

# கேப்பாபிலவு முகாமை மாற்ற 50 லட்சம் ரூபா கையளிப்பு!



## மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கேப்பாபிலவு இராணுவ முகாமை மாற்றுவதற்காக இரா ணுவம் கோரிய 50 லட்சம் ரூபா நிதியை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்துள்ளதாக சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடி யேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித் துள்ளார்.

அத்துடன், வடக்கில் ஏனைய காணிகள் விடுவிப்பு தொடர்பில் விரைவில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், ருவான் விஜேய வர்த்தனவைச் சந்திக்கவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.


இந்தவிடயம் தொடர்பாக அமைச்சர் சுவாமிநாதன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு கிழக்கில் உள்ள காணி களை விடுவிப்பது தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி பாதுகாப்பு அமைச் சில் விசேட கூட்டம் நடைபெற்றது.

இதன்போது வடக்கில் பாது காப்புத் தரப்பினிடத்தில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர் பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

அதன்போது தாம் வேறொரு இடத்துக்குச் செல்வதால் நிதி தேவையாகவுள்ளது. தமது முகாமை அகற்றுவதற்கு 50 லட் சம் ரூபா வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படுமிடத்து ஆறு வாரங்களில் தாங்கள் அவ் விடத்தைக் கையளிப்பதற்குத் தயாராகவுள்ளதாகவும் இராணு வத்தினர் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தநிலையில் எனது அமைச் சால் குறித்த இராணுவ முகாமை மாற்றுவதற்காக 50 லட்சம் ரூபா நிதி பாதுகாப்பு அமைச்சிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.-என்றார்.



# இலங்கைத் தூதுவராக பிரான்ஸுக்கு திலக்!

பிரான்ஸ் நாட்டுக் கான இலங்கை தூதுவ ராக திலக் ரணவிராஜ நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த நாட்டின் தூது வராக இவர் நியமிக்கப் பட்டதையடுத்து நியம னம் தொடர்பான சான் றிதழ் ஆவணத்தை அந்த நாட்டு இரண்டா வது இளவரசர் அல் பேட்டிடம் கையளித் தார்.

இதன்போது இலங் கையில் ஏற்பட்டுள்ள அரசியல் முன்னேற்றம் தொடர்பில் விளக்க மளித்துள்ளார்.

இந்த நிகழ்வு பலேஸ் பிறின்சியர் டி மொனாகோ மாளிகை யில் இடம் பெற்றது.

தனிப்பட்ட ரீதியில் இடம் பெற்ற கலந்து ரையாடலின் போது தூதுவர் இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் நல்வாழ்த்துக்களை இளவரசரிடம் தெரிவித் துக் கொண்டார்.

இலங்கையில் இடம் பெற்று வரும் அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி இடை நிறுத்தப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்குவதற்கு ஏது வாக அமைந்துள்ளது.

இதனூடாக இலங்கை மேலும் பய னடையும் என்று இள வரசர் இதன்போது சுட் டிக்காட்டினார். (எ)

# வடக்கு, கிழக்கை இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலை விரைவில்

## இந்தியா உதவும் என்கிறார் கிரியெல்ல எம்.பி.

வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் உள்ள மாவட்டங் களை ஊடறுத்து நிர்மாணிக்கப் படவுள்ள அதிவேக நெடுஞ்சா லைக்கு இந்தியா உதவும் என் றும், அதற்கான யோசனை ஒன்று இந்தியாவால் கையளிக்கப் பட்டுள்ளது என்றும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச் சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரி வித்தார்.

கண்டியில், நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

இலங்கைக்கு விஜயம் செய் திருந்த இந்தியப் பிரதமர் நரேந் திர மோடி, நோர்வூட் நகரில் இடம்பெற்ற கூட்டத்தில் உரை யாற்றும் போதே, மலையக மக் களின் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வாக மேலும் 10 ஆயிரம் வீடு களை, இந்திய அரசின் உதவி யுடன் கட்டித் தருவதாக உறுதி யளித்தார். இவ்வாறு, இந்திய அரசால் பல்வேறான அபிவி ருத்தித் திட்டங்கள் இலங்கை யில் முன்னெடுக்கப்படவுள் ளன.

இந்தநிலையிலேயே, மன் னார், யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு ஊடாக அம்பாறைக்கு அதிவேக நெடுஞ் சாலையை அமைப்பதற்கான யோசனை ஒன்று இந்திய அர சால் முன்வைக்கப்பட்டுள்ளது.- என்றார். (க)

# டிக்கோயா வைத்தியசாலை திறப்பு விழாவில் ஏற்பட இருந்த பெரும் மோதல் தவிர்ப்பு!

இந்திய அரசின் நிதியொதுக் கீட்டின் கீழ் நிர்மாணிக்கப் பட்டடிக் கோயா வைத்திய சாலையை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்த நிகழ்வில் ஏற்பட விருந்த பெரிய மோதல் சம்பவம் ஒன்றை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையின ரால் கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டு தடுக்கப் பட்டுள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

இதுதொடர்பில் ஆங்கில ஊடகம் வெளியிட்ட தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

இந்த நிகழ்வின்போது மலையகத்திலுள்ள சகல அரசி யல்வாதிகளையும் ஒன்றி ணைந்து ஒரே மேடையில் அமர வைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, மலைய கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகள், தங்கள் அதிகாரத்தைக் காட்டிக் கொள் வதற்காக இந்தச் சந்தர்ப்பத் தைப் பயன்படுத்திக் கொள் வதற்காக முயற்சித்துள்ளன.

இரு அரசியல் கட்சிகளுக் கும் இடையில் முறுகல் நிலை தீவிரமாக காணப்பட்டதுடன், சத்தமிட்டு மோதல் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முயற் சித்த போதிலும் பலத்த பாதுகாப்பு காரணமாக அந்த முயற்சி தடுக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் நகரத்தில் இருந்து நோர்வூட் மைதானம் வரையி லான வீதிகளில் பிரதமர் மோடி மற்றும் இரண்டு தரப்பின் தலைவர்களின் உருவப்படங் களால் போஸ்டர்கள் ஒட்டப்பட் டிருந்தன.

மோடி வருகை தந்து ஒரு மணித்தியாலத்தின் பின்னர் தமிழ் முற்போக்குக் கூட்ட ணியின் போஸ்டர்கள் சிலரால் நீக்கப்பட்டு வான் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தமையைக் காண முடிந்தது.-என்றுள்ளது. (எ)

# நல்லாட்சி அரசுக்கும் படையினருக்கும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்துகிறோம்

## அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்கிறார் சிறிதரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)



நல்லாட்சி என்று கூறப்படுகின்ற அரசு தம்மை நல்லவர்களாக காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றதே தவிர தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டவாக்குறுதிகளுக்கு அமைய தீர்வைப் பெற்றுத்தர எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களைக் கொன்று குவித்த படையினர் நடத்திய வெசாக் நிகழ்வுகளில் தமிழ் மக்கள்கலந்துகொண்டனர். இதன் மூலம், இத்தனை இழப்புக்களுக்கு பின்னரும் தமிழ் மக்கள் நல்லிணகத்தை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், அரசோ தென்னிலங்கை சக்திகளோ நல்லிணத்கத்தை வெளிப்படுத்த தயாராக இல்லை.

தமிழினப்படுகொலைவாரத்தின் நான்காவது நாளான நேற்று, நெடுந்தீவில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் –

தமிழ் மக்கள் உரிமைகளைக்கேட்டமைக்காகபல இடங்களில் வைத்து பல சந்தர்ப்பங்களில் அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவற்றில் கொக்கட்டிச்சோலை, மாமாங்கம், வாகரை, குமாரபுரம், நவாலி, நாகர்கோவில், குமுதினி படுகொலைகள் போன்றன குறிப்பிட்டுக் கூறக்கூடியவை.

தமிழ் மக்களின் கோரிக்கைகளைப்புறந்தள்ளி அவர்களின் இருப்பை இல்லாமல் செய்வதற்கே இந்தப் படுகொலைகள் இடம்பெற்றன.

இந்தப் படுகொலைகளுக்கானநீதியைவழங்குமாறுதமிழ் மக்கள்கோரினர். ஆனால் தென்னிலங்கையில் ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் மக்களுக்கு நீதியை வழங்கத் தயாராக வில்லை.

தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களில், சிங்கள மக்கள் இல்லாதஇடங்களில்வெசாக்கூடுகள் அமைக்கப்பட்டுவெசாக்கொண்டாடப்படுகிறது. இது ஒரு ஆக்கிரமிப்புச்செயற்பாடு ஆகும். தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாடுகளை அழிப்பதையே நாம் இதனூடாகக் காண்கின்றோம்.

தமிழ் மக்களைக் கொன்று குவித்த படையினர் நடத்திய வெசாக் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் கலந்துகொண்டனர். இத்தனை இழப்புக்களுக்கு பின்னரும் தமிழ் மக்கள் நல்லிணகத்தை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், அரசோ தென்னிலங்கை சக்திகளோ நல்லிணத்கத்தைவெளிப்படுத்ததயாராக இல்லை.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் படுகொலைகளுக்கும்கட்டாயம்நீதி வழங்கப்பட்டே ஆகவேண்டும். – என்றார். (ம)

# சித்தன்கேணியில் பட்டப் பகலில் வீடுடைத்து பொருள்கள் திருட்டு

## வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை

சித்தன்கேணியில்ஆசிரியை ஒருவரின் வீட்டில் வெளிநாட்டு நாணயங்கள், நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றிருந்த நிலையில் நேற்று மதியம் 1.30 மணியளவில் வீட்டுக் கதவுகளை உடைத்த உட்சென்ற திருடர்களே பொருட்களைத் திருடிச் சென்றனர்எனத்தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியையானமேற்படிவீட்டுப்பெண்மணிநேற்றுக்காலை பாடசாலைக்குச் சென்றுவிட்டு மதியம் வீட்டுக்குத் திரும்பிச் சென்றபோதே அங்கு திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

வீட்டின் அறைகள் அனைத்தும் திறக்கப்பட்டு சல்லடை போட்டுத் தேடி அங்கிருந்த 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான ஸ்ரேலிங் பவுண்ஸ் மற்றும் அமெரிக்க டொலர் ஆகிய வெளிநாட்டுநாணயங்கள், ஒன்றரைப் பவுண் தாலிகள், கையடக்கத்தொலைபேசிகள்-02, டிஜிட்டல் கமரா – 01, டிஜிட்டல் வீடியோ கமரா – 01 ஆகிய பொருள்கள் திருடிச் செல்லப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றிரவு சென்ற தடயவியல் பரிசோதனைப் பிரிவினரும் அங்கு சென்று தடயங்களைப் பதிவு செய்தனர்.

இதேவேளை, மேற்படி வீட்டுக்கு 500 மீற்றர் தூரத்திலேயே கடந்த வாரம் இரவுவேளை பெண்ணொருவரின் காது அறுத்து தோடு கொள்ளையிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-54)

# குமுதினிப் படுகொலை நினைவாக நெடுந்தீவில் கவிதை நூல் வெளியீடு




(எஸ்.நிதர்ஷன்)

குமுதினிப்படகில்பயணித்த பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்ட 32 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி நேற்று நெடுந்தீவில் நடைபெற்ற போது, அந்தப் படுகொலை தொடர்பாக ஆக்கப்பட்ட 'நீலக் கடலலையின் நினைவுகள் பாகம் 01' எனும் கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

குமுதினிப் படகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு, தமிழினப்படுகொலைநினைவு வாரத்தின்நான்காவதுநாளான நேற்று நெடுந்தீவில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் வைத்து மேற்படி கவிதைநூல்வெளியிடப்பட்டது.

பசுந்தீவு ருத்திரனால் ஆக்கப்பட்ட மேற்படி கவிதை நூலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வெளியிட்டு வைத்தார். இந்த நிகழ்வில், குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம)

# நாட்டில் மீண்டும் டெங்கு அதிகரிப்பு: கொழும்பில் இன்று அவசர கூட்டம்

நாட்டில் டெங்கு நோய் மீண்டும் வேகமாகப் பரவி வருகின்றது எனத் தெரிவிக்கப்படும் நிலையில், அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுக்கப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு டெங்கு ஒழிப்பு செயலணியை உடனடியாக ஒன்றுகூட ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

நோயாளர்கள்மற்றும்நுளம்புக் குடம்பிகள் தொடர்பான தரவுகளுக்கேற்ப கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் இடர் பிரதேசங்களாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

இந்த ஆபத்தான நிலைமையைக் கவனத்திற் கொண்டு டெங்கு பரவுவதை உச்ச அளவில் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் தொடர்பாக இன்று ஜனாதிபதி தலைமையில் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது. (ம)

# தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டவை

## அரசையும் படைகளையும் குற்றஞ்சாட்டுகிறார் சிவாஜிலிங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைஅரசும்படைகளும் தமிழ் மக்கள் மீது நடத்திய அனைத்துப்படுகொலைகளும் திட்டமிட்ட இனஅழிப்புஆகும். இந்தப் படுகொலைகளுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை. இனியும் அவ்வாறு நீதிவழங்கப்படாவிட்டால் நாம் நேரடியாக சர்வதேசத்தின் உதவியுடன் நீதியைப் பெறுவோம் எனத் தெரிவித்தார் எம்.கே.சிவாஜிலிங்கம்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைப் படுகொலை செய்து யுத்தம் முடிவுக்கு வந்த மே 18 ஆம் திகதியை இறுதி நாளாகக் கொண்டு தமிழினப் படுகொலை வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் பல இடங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

இதன் நான்காவது நாளான நேற்றுநெடுந்தீவில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் –

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட ஒவ்வொரு படுகொலைக்கும் ஒவ்வொரு வரலாறு உள்ளது. அந்தப் படுகொலைகளில் சிலவற்றை மாத்திரமே நாம் தற்போது நினைவு கூருகின்றோம்.

இலங்கைவரலாற்றில் தமிழ் மக்கள் மீதான எந்தப் படுகொலைக்கும்தீர்வுவழங்கப்பட்டதாக இல்லை. இனியும்தீர்வுவழங்கப்படாமல் இருப்பதை நாம் அனுமதிக்கமாட்டோம். சர்வதேசத்தின் உதவியுடன்நீதியைப்பெறுவதற்கு எம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். - என்றார். (ம)

# கறுப்புக் கொடியுடன் நின்றாள் குமுதினி!



(எஸ்.நிதர்ஷன்)

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையே சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு நேற்றுக் கறுப்புக் கொடி தாங்கி நின்றது. நேற்று முழுநாளும் அது சேவையில் ஈடுபடவில்லை.

தீவக மக்களுக்காக கடல் மார்க்கப் போக்குவரத்தில் ஈடுபடும் குமுதினிப் படகில் கடந்த 1985 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் 36 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்தப் படுகொலையைக் கண்டிக்கும் முகமாகவும், அதில் கொல்லப்பட்ட மக்களுக்கான துக்கத்தை வெளிப்படுத்தும் முகமாகவும் வருடாந்தம் அந்த நினைவுநாளில்குமுதினிப்படகு சேவையில் ஈடுபடுவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-07)

# மன்னாரில் கரை ஒதுங்கிய மீனவரின் சடலம்

(மன்னார் நிருபர்)

மன்னார் வங்காலைக் கடற்கரையில் கரை ஒதுங்கிய மீனவரின் சடலம் அவரின் உறவினர்களால் அடையாளம் காண்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்குப் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்க மன்னார் பதில் நீதவான் செபநேசன் லோகு பொலிஸாருக்குக் கட்டளை பிறப்பித்தார்.

கற்பிட்டி பத்தலங்குண்டு தீவுப் பகுதியிலிருந்து கடந்த 10ஆம் திகதி அன்று இரண்டு மீனவர்கள் ஒரு சிறிய படகின் மூலம் மீன்பிடிக்காகச் சென்றபோது படகு விபத்துக்குள்ளாகியதால் இரு மீனவர்களும் கடலில் மூழ்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் அறிந்து அப்பகுதிக்குச் சென்ற ஏனைய மீனவர்களால் ஒருவர் அன்றே சடலமாக மீட்கப்பட்டார். மற்றையவர் தேடப்பட்டு வந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டத்தில் வங்காலைக் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் சடலமாக அவர் மீட்கப்பட்டார்.

இது விடயம் வங்காலைப் பொலிஸாருக்குத்தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் மாவட்டப் பதில் நீதவான் செபநேசன் லோகு சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணையை மேற்கொண்டார். உயிரிழந்தவர் அணிந்திருந்த ஆடைகளைக் கொண்டு இறந்தவர் வர்ணகுலசூரிய ஜோசப் பர்னாந்து (வயது55) எனஉறவினர்களால் அடையாளங் காணப்பட்டார்.

இதைத் தொடர்ந்து சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கும்படி உத்தரவு பிறப்பித்தார். (உ-112)

# யாழ். பல்கலை மாணவர்கள் இன்று கவனயீர்ப்பு

யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் இன்று முற்பகல் 11.30 மணியளவில் பல்கலைக்கழகத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்திருக்கின்றது.

வித்தியா கொலை வழக்கின் விசாரணைகளை யாழ். மேல் நீதிமன்றில் நடத்தக் கோரியும்,

யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் இருவர் பொலிஸாரால் கொல்லப்பட்டமைக்கு நீதிகோரியும் -

இந்தஇருவிடயங்களுக்கும் அரசு 30நாள்களுக்குள் உரிய பதிலை வழங்க வேண்டும் எனத்தெரிவித்துமே இது நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## திருப்புமுனை நாள்கள் இவை

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை வந்து திரும்பிய பின்னர், இங்கு அரசியல் நிகழ்வுகளின் கட்டவிழ்வு புதிய வடிவம் எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

அடுத்து வரும் வாரங்களும் நாள்களும் தீர்க்கமான பல விடயங்கள் அரங்கேறுவதற்கு வாய்ப்பளிக்கலாம் போலத் தோன்றுகின்றன.

சீனாவுக்குச் சென்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை தாயகம் திரும்புகின்றார்.

நீண்ட காலமாக இன்று நடக்கும், நாளை நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவை மாற்றம், பிரதமர் ரணில் நாளை நாடு திரும்பிய கையோடு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் பல மூத்த அமைச்சர்களின் அமைச்சுகள் மாற்றப் படலாம் என்று கூறப்படுகின்றது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பூகம்பம் வெடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்றைய நிலையில், பெரும்பாலும் ஐ.தே.கட்சியினர் வைத்திருக்கும் அமைச்சுகள் அதே கட்சியில் வேறு ஆள்களுக்கும், அதே போல சு.கவினர் வைத்திருக்கும் அமைச்சுகள் அதே கட்சியில் வேறு ஆள்களுக்கும் கைம்மாறலாம் என்பதே தகவல்.

ஐ.தே.கட்சியின் வசம் உள்ள நிதி, வெளியுறவு போன்ற முக்கிய அமைச்சுகள் ஐ.தே.கவினருக்குள்ளேயே மாற்றப்படவே வாய்ப்புகள் உள்ளன. ஆனால், அந்த மாற்றங்கள் கூட உட்கட்சிப் பிரளயத்தை ஏற்படுத்தக் கூடியவையே.

அதேபோல சு.கவிலும், தம் பக்கம் நிற்பது போல பாவனை பண்ணி, அதன் மூலம் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்படுவோரை இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன களை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் பெரும்பாலும் இன்று அல்லது தொடர்ந்து வரும் நாள்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கவிருக்கின்றார். அவருடன் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ. சுமந்திரனும் அந்தச் சந்திப்பில் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின் போது தமிழ் மக்களின் உடனடி அவசரப் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதே தமது பிரதான நோக்கம் என்று சம்பந்தன் கூறியுள்ளார். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், வேலையற்ற பட்டதாரிகள் சர்ச்சை ஆகியன குறித்துப் பேசுவதற்குத் தாம் எதிர்பார்த்திருக்கின்றார் எனச் சம்பந்தர் கூறியுள்ள போதிலும், அதற்கு அப்பாலும் சில, பல முக்கிய விடயங்கள் அந்தச் சந்திப்பில் ஆராயப்படும் என்பது நம்பிக்கையாக அறிய வந்தது.

அது, புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றிய ஏற்பாடுகள் சம்பந்தமான அம்சங்கள்தான். இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கை வருகையை அடுத்து இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் பல ஆக்கபூர்வமான சமிக்ஞைகள் கிடைத்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

அந்த நம்பிக்கையுடன்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சம்பந்தன் - சுமந்திரன் குழு எவ்வேளையிலும் சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம், எட்டாண்டுகளுக்கு முன்னர் பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதன் மூலம் முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் நினைவேந்தல் நிகழ்வு நாளை மறுதினம் வருகின்றது.

அதற்கு முதல் நாள் - அதாவது நாளை - வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து வடக்கு - கிழக்கு தமிழர்களின் நிலை குறித்துப் பேசவிருக்கின்றார்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறும் 18 ஆம் திகதி - அதாவது நாளை மறுதினம் - முல்லைத்தீவில் நடைபெறும் சில நிகழ்வுகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்குபற்றவுள்ளார் என வெளியான செய்திகளை அடுத்து, கூட்டமைப்பின் தலைமை அவரைத் தொடர்பு கொண்டு சில விடயங்களைத் தெளிவுபடுத்தியதாக நம்பகமாக அறிய வந்தது.

"முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது உலகத் தமிழினத்தின் ஆத்மாவைத் தொடும் உணர்வுபூர்வமான விவகாரம். அந்த விடயத்தைக் கையாள்வதில் அதிக கவனமும் பொறுப்பும் அவசியம். அந்தத் தினத்தில் முள்ளிவாய்க்கால் அமைந்துள்ள முல்லைத்தீவுக்குப் போவதானால், முதலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விடயத்துக்குக் காத்திரமாகப் பங்களிக்கும் விதத்தில் நடந்து கொள்ளுங்கள்; பிரதிபலிப்பைக் காட்டுங்கள். அதைப் புறக்கணித்து, கொச்சைப்படுத்தி நடந்து கொள்வீர்களானால், சமாதான முயற்சி - நல்லிணக்க எத்தனம் - அமைதித் தீர்வுக்கான நடவடிக்கைகள் - எல்லாம் பாதிக்கப்பட்டு விடும்; பாழ்பட்டுப் போகும் வாய்ப்புண்டு" - என்று சாரப்பட கூட்டமைப்பு ஏற்கனவே ஆட்சித் தலைமைக்கு எச்சரிக்கை மணி அடித்து விட்டது என்பது உள் வீட்டுத் தகவல்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு, ஆட்சித் தலைமை காட்டப் போகும் பிரதிபலிப்பு என்ன என்பது அவதானிக்கப்பட வேண்டியது. சில சமயம் நல்ல திருப்புமுனையை - ஆக்கபூர்வமான சமிக்ஞையை - அது தந்தாலும் தரக்கூடும். பொறுத்திருந்து பார்ப்போமே!

## பிணைமுறி விநியோகம் குறித்த இரகசிய ஆவணம் ஜனாதிபதிக்கு!

பிணைமுறி விநியோகம் தொடர்பான இரகசிய ஆவணம் ஒன்றை, பிணைமுறி விநியோகம் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் மத்திய வங்கி சமர்ப்பித்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிணைமுறி விநியோகம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த ஒரு மாத காலமாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், நேற்று இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனின் பதவிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னதாக கோப்குழு விசாரணை நடத்தி வந்தது.

அந்தக் குழுவுக்கு பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டு வந்தன என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் விசேட ஆணைக்குழு நிறுவப்பட்டு முறி விநியோகம் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-க)

## மோடியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட மல்வத்த, அஸ்கிரிய பீட மகாநாயக்கர்கள்

கொழும்பு, மே 16

இந்தியாவுக்கு வருமாறு விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்பை மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இலங்கைக்கு வந்திருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

கண்டியில் மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகா நாயக்கர்களை இந்தியப் பிரதமர் சந்தித்த போது இந்த அழைப்பை விடுத்திருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர், கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## பஸில் மீதான 'திவிநெகும' வழக்கு ஒத்திவைப்பு!

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 'திவிநெகும' அபிவிருத்தித் திணைக்கள நிதிமோசடி தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மேற்படி வழக்கில், முறைப்பாடு தொடர்பில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் உரிய முறையில் பிரதிவாதிகளுக்கு கிடைக்கப் பெறவில்லை என்று பிரதிவாதித் தரப்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து அந்த வாக்குமூலத்தை பெற்றுக்கொடுப்பதாக சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி வாக்குறுதி அளித்தமையைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்க, நீதிபதி ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ)

## உயர்கல்வி நிறுவனங்களைக் கண்டறிய சுயாதீன அதிகார சபையை நிறுவ ஏற்பாடு

கொழும்பு, மே 16

நாட்டுக்குள் இயங்கி வரும் உயர்க்கல்வி நிறுவனங்கள் தொடர்பில் கண்டறிவதற்காக, சுயாதீன அதிகார சபை ஒன்றை நிறுவுவதற்கு, அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த சுயாதீன அதிகார சபையினூடாக, அனைத்து உயர் கல்வி நிறுவனங்களும் ஒழுங்கு படுத்தப்படும் என்று, அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உரிய தரங்களின்றிய நிறுவனங்களாயின், அவற்றுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும், அரசு கலந்துரையாடி வருகின்றது.

இதேவேளை, மாலபேயிலுள்ள நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை, அரசிடம் பொறுப்பளிக்க, அதன் நிர்வாகச் சபை இணங்கியுள்ளது.- என்றார். (எ)

## கீதா குமாரசிங்க மீதான வழக்கு பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தும்

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் வழக்கு பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமைகொண்டவர் என்ற அடிப்படையில் அண்மையில் கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ரத்துச் செய்திருந்தது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக கீதா குமாரசிங்க உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அத்துடன் உறுப்புரிமை ரத்துச் செய்வது தொடர்பான தீர்ப்பை இடைநிறுத்துமாறும் உத்தரவு பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்தநிலையில், இந்தவழக்கு நாடாளுமன்றிலும் இலங்கை அரசியலிலும் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தும் என்று பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆளும் கட்சிக்கு விசுவாசமான ஒருவரை நியமிக்கும் நோக்கில் தூர நோக்கற்ற வகையில் அரசு கீதா குமாரசிங்க மீது வழக்குத் தொடர்ந்திருந்தது. கீதா குமாரசிங்கவின் உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டால் சில வேளைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட அனைத்து வேட்பாளர்களது பட்டியலும் நிராகரிக்கப்படக் கூடிய சாத்தியம் உண்டு என்று சில சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர். இவ்வாறு நிராகரிக்கப்பட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களையும் இழக்க நேரிடும். சட்ட வல்லுநர்களின் இந்த நிலைப்பாடு தொடர்பில் எமக்கு சந்தேகம் நிலவி வருகின்றது.

எனினும், இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் அதன் முழு நலன்களும் ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும். -என்றார்.


### வருமுன் காப்போம்! மரணம் தவிர்ப்போம்!

உங்கள் வீதியில், விலங்கு விசர் நோய் எதிர்ப்பு ஊசி நாய்களுக்கு ஏற்றப்படும் தினத்தை தவறவிட்டிருந்தால், பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரிடமோ (PHI) சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையுடனோ தொடர்பு கொண்டு மற்றுமொரு தினத்தில் அவ் ஊசியை ஏற்றிக் கொள்ள முடியும்.



விசர்நோய்த் தடுப்பூசி வழங்குவதன் மூலம். இந்நோயை பூரணமாகத் தடுத்திட முடியும்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.


### நாளை

17.05.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் முழுவதும்
திதி : ஷஷ்டி பி.ப. 01.13 வரை

சுபநேரம் : 4.23 – 5.53 வரை
இராகுகாலம் : 11.53 – 1.23 வரை

# காணாமற்போனோர் தொடர்பில் இதுவரை ஜனாதிபதிக்கு 7 ஆயிரத்து 400 கடிதங்கள்!

## ஆனால் இன்றுவரை ஒன்றுக்கும் பதில் இல்லை; போராட்டத்தில் ஈடுபட்டோரை சந்தித்தபின் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, மே 16

காணாமற் போனோர் தொடர்பில் ஜனாதிபதிக்கு பொதுமக்களால் அனுப்பப்பட்ட 7 ஆயிரத்து 400 கடிதங்களில் ஒன்றுக்கும் கூட இதுவரை பதில் அளிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை நேற்று முன்தினம் சந்தித்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களது போராட்டம் 80ஆவது நாளை கடந்துள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்களில் நாங்கள் தொடர்ச்சியாகப் பங்கு கொண்டவர்கள்.

தமிழ் மக்களது பேராதரவைப் பெற்று ஆட்சியமைத்த இந்த தேசிய அரசு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உருப்படியான எந்தப் பதிலையும் இதுவரை வழங்கவில்லை என்பது மிகவும் வேதனையான விடயம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி 7 ஆயிரத்து 400 பேர் தனித்தனியாக ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். ஆனால், தகவல் அறியும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட பின்னரும் ஜனாதிபதியால் ஒரு கடிதத்துக்குக் கூட பதில் அனுப்பி வைக்கப்படவில்லை.

எனவே, இந்தப் புதிய அரசு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு விரைவாக அவர்கள் இருக்கின்றார்களா அல்லது இல்லையா என்று பதிலை வழங்க வேண்டும்.

ஏனென்றால் அவர்கள் போராட்டத்தை நடத்துகின்ற இந்த தகரக் கொட்டகைக்குள் ஒரு மணிநேரம் கூட இருக்க முடியாது. அகோரமான வெப்பமான நிலைமை, இடைக்கிடையே கடுமையான மழை, அத்துடன் வாகனங்களின் இரைச்சல், இரவில் நுளம்புக்கடி என்பவற்றுக்கு மத்தியில் இந்த வயது போனவர்கள், நோயாளிகளாக இருப்பவர்கள் தமது பிள்ளைகளுக்காக சாத்வீகமான முறையில் தங்களது போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கு வாழ் அனைத்து மக்களும், மனித உரிமை அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் என அனைவரும் நூறாவது நாள் போராட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்கி இந்த மக்களின் கோரிக்கைக்கு நீதி



யைப் பெற உதவ வேண்டும். -என்றார். (எ)

# முல்லையில் வறட்சி பாதித்த பகுதிக்கு தற்போது குடிதண்ணீர் விநியோகம்

## மாவட்ட அரச அதிபர் கூறுகிறார்



முல்லைத்தீவு, மே 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு குடி தண்ணீர் விநியோக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினைகள் தொடர்பாக மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவுமாவட்டத்தின் கரைதுறைப்பற்று, ஒட்டுச்சுட்டான், மாந்தை கிழக்கு போன்ற பிரதேசங்களில் குடி தண்ணீர் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதனால் மேற்படி பகுதிகளுக்கான குடி தண்ணீர் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

அந்தப் பிரதேசங்களில் குடிதண்ணீர் நெருக்கடிகள் தொடர்பாக எமக்குக் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் பிரதேச சபைகள் மற்றும் பிர தேச செயலகங்களின் ஒழுங்குபடுத்தல்களின் கீழ் விநியோக நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்தும் எமது மாவட்டத்தில் இந்நிலைமை நீடிக்குமானால் பெரியளவில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனினும், தற்போது மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகச் செயற்பாடுகள் எவ்விததடங்கல்களும் இன்றி தொடர்ந்தும் நடைபெறுகின்றன. -என்றார். (எ)



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக முன்னெடுத்துள்ள தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 70 ஆவது நாளை எட்டியுள்ளது. (எ-81)

# சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனங்களை சேவை மூப்பின் அடிப்படையில் வழங்க வேண்டும்

## வலியுறுத்துகிறார் மஸ்தான் எம்.பி.

தகைமை அடிப்படையின்றி சேவை மூப்பு அடிப்படையிலாவது, சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த போர்க் காலத்தில் பணியாற்றிய அனைத்து சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியின் பிரதான அலுவலகத்துக்கு முன்பாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபி விருத்திக்குழு இணைத் தலைவருமான கே. காதர் மஸ்தான் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, வடமாகாணத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 820 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனத்தை பெற்றுத்தர உதவுமாறும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.



அத்துடன், பல வருடங்களாகப் பணியாற்றிய தமக்கு நியமனங்கள் வழங்கப்படாமல், பலருக்கு அரசியல் ரீதியாக வழங்கப்பட்டுள்ளன எனவும் தற்போதைய அரசின் சுற்றறிக்கையின் அடிப்படையில் தாம் நிராகரிக்கப்பட்டுள்ளனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் வடக்கில் இறுதியாக இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் நாம் கலந்துகொண்டு பணியாற்றினோம்; அந்த வேலைத்திட்டம் முடிவடைந்த பின்னர் நாம் கைவிடப்பட்டுள்ளோம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர், "இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கலந்துரையாடி, சுகாதாரத் தொண்டர்களுக்கான வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க தான் முயற்சிப்பேன்" என உறுதியளித்துள்ளார். (எ)

# ஆலயத்தில் திருட்டு!

கிளிநொச்சியில், முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மூலஸ்தானம் மற்றும் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு நகை, பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

கனிக்கிழமை மாலை ஆலயப் பூசை முடிந்த பின்னர் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் காலை ஆலயத்திற்கு சென்று பார்த்த போது ஆலய மூலஸ்தான கதவுகள் உடைக்கப்பட்டு இருந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அம்பாளுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க நகைகள் களவாடப்பட்டதுடன் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு அதிலிருந்த ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடும் மட்டு. விமான நிலையம்

## மே 31 முதல் சிவில் விமான அதிகார சபையிடம் வசமாகிறது

மட்டக்களப்பு, மே 16

இராணுவத்தினரின் பயன்பாட்டுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த மட்டக்களப்பு விமானப்படை விமானத் தளம் எதிர்வரும் 31 ஆம் திகதி தொடக்கம் சிவில் விமான அதிகார சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாக சிவில் விமான அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.ஏ. நிமலசிறி தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரைகாலமும் இராணுவ விமானங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த மட்டக்களப்பு விமான நிலையம் இம்மாத இறுதியிலிருந்து தனியார் மற்றும் வர்த்தக நோக்கிலான ஜெட் விமானங்கள் தரையிறங்குவதற்கும் அனுமதிக்கப்படவுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விமானத் தளம் எதிர் வரும் 31ஆம் திகதி தொடக்கம் நடை முறைக்கு வரும் வகையில் சிவில் விமான அதிகார சபைக்கு கையளிக்கப்பட வேண்டும்.

இதன்படி, சிவில் விமானப் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்தும் விதமாக இரண்டு விமான சேவைகள் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கொழும்புக்கு இடையில் தினமும் நடைபெறவுள்ளன. -என்றார். (எ)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறு ஆர்ப்பாட்டம்




திருகோணமலை, மே 16

திருகோணமலை, கிண்ணியா கல்வி வலயத்துக்குட்பட்ட முள்ளிப் பொத்தானை கோட்டத்திலுள்ள சிறாஜ் இசுறு கலவன் வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி, வித்தியாலய மாணவர்களும் பழைய மாணவர்களும் தமது பெற்றோருடன் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவிக்கையில்; "539 மாணவர்கள் கல்வி பயின்று வரும் அந்த வித்தியாலயத்தில் 16 ஆசிரியர்கள் மாத்திரமே கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் 20 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களுக்கே இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இது தொடர்பில், பல தடவைகள் கல்வி உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை" என்று சுட்டிக் காட்டினர். (எ)

# குடும்பிமலை ஆலயத்துக்குச் செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம்!

மட்டக்களப்பு, மே 16

மட்டக்களப்பு - கோரளைப் பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குடும்பிமலை முருகன் ஆலயத்துக்குச் செல்ல இராணுவத்தினரால் விதிக்கப்பட்ட தடை, கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கத்தின் நடவடிக்கையை அடுத்து நீக்கப்பட்டது.

அவ்வாலயத்தில், வருடா வருடம் பிரதேச மக்களால் பூசைகள் மேற்கொள்ளப்படுவது வழமை. இம்முறை அங்கு திருவிழா மேற் கொள்ளச் சென்ற மக்களுக்கு, குடும்பிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமின் அதிகாரிகளால், தடை விதிக்கப்பட்டது.

மேற்படி இடத்தில் போர்க் காலத்தின் பின்னர் பௌத்த வணக்கஸ்தலம் அமைக்கப்பட்டு, வெசாக் பௌர்ணமி தினக் கொண்டாட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், அங்கு முருகன் ஆலயத்துக்குச் செல்வதற்கு, ஆலய நிர்வாகத்தினருக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்த விடயத்தை கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கத்தின் கவனத்துக்கு ஆலய நிர்வாகத்தினர் கொண்டு சென்றனர்.

அதையடுத்து தரவையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமின் அதிகாரி பிரிகேடியர் குலதுங்கவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது, மேற்படி விடயம் தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது. பின்னர் அந்த அதிகாரியின் நெறிப்படுத்தலின் பேரில், தடைநீக்கப்பட்டு, முருகன் ஆலயத்துக்குச் செல்லவும் உற்சவத்தை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், இனிமேல் இவ்வாறான தடைகள் இடம்பெறா என்றும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருத்தத்தைத் தெரிவிப்பதாகவும் பிரிகேடியர் குல துங்க தெரிவித்தார். (எ)

# 61ஆடுகளை ஏற்றிச்சென்ற மூவர் சிக்கினர்

திருகோணமலை, மே 16

திருகோணமலை - கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திர மின்றி, வான்ஒன்றில் 61 ஆடுகளைச் ஏற்றிச்சென்ற மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடைகளை துன்புறுத்தும் வகையில் சிறிய வானில் ஏராளமான ஆடுகளைக் கொண்டு செல்வதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டனர்.

சந்தேகநபர்கள் குருநாகல் மற்றும் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# மதத்தை எவராவது அழிக்க முயல்வாராயின் காப்பாற்றவேண்டியவர்கள் மதத் தலைவர்களே!

## கல்முனை விகாராதிபதி கூறுகிறார்




ஒரு நாட்டிலே மதங்கள் எவையையும் அழிக்கப் படுகின்ற போது அதற்கு முகங்கொடுக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த மத தலைவர்களிடத்தே இருக்கின்றது என்பததை யாரும் மறந்துவிடக்கூடாது என்று கல்முனை விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்னதேரர் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் அனுசரணையுடன் கல்முனை கல்வி வலய அலுவலகத்தால் தமிழ், சித்திரை புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு கல்முனை உவெஸ்லி உயர்தரபாடசாலையில் கல்முனை வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.ஜலீல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இந்த நல்லாட்சி அரசு இந்த நாட்டு மக்கள் அனைவரும் சகோத ரத்துவத்துடனும், ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதற்காக பல நல்ல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

நாட்டிலே உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் சந்தோசமாக வாழ வேண்டும், அவர்களிடத்தே ஒற்றுமை வெளிக்காட்டப்பட வேண்டும். இப்போது இந்த நாட்டிலே நான் ஒரு பௌத்தமதத் தலைவர் என்ற வகையில் எனக்கு அடிக்கடி சேறு பூசும் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டுதான் வருகின்றன. அவ்வாறு செய்பவர்களுக்கு நான் கூறவிளைவது என்னவென்றால் நான் ஓர் இனவாதி அல்லன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

நானும் ஒரு பௌத்த மதத்தின் தலைவர் என்ற ரீதியில் எனது மதத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னிடம் இருக்கின்றது. அதனையே நான் செய்கின்றேன் என்பதனை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

பல்லின சமூகம் வாழும் இந்த நாட்டிலே ஒவ்வோர் இனங்களும், மதங்களும் வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் சகோதரர்கள் என்ற முறையில் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்கு நாங்கள் நல்ல சிந்தனைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். -என்றார். (எ)

# மட்டு. புனித செபஸ்தியார் ஆலய கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுப்பு!



மட்டக்களப்பு புளியடிக்குடா புனித செபஸ்தியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா கூட்டுத்திருப்பலி நடைபெற்றது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் இயேசுசபைத் தலைவர் அருட்தந்தை டெக்ஸ்ரர் கிறே தலைமையில் இலங்கை இயேசுசபை மாகாணத் தலைவர் அருட்தந்தை போல் சற்குணநாயகம், தேவாலயத்தின் பங்குத் தந்தை லோரன்ஸ் மற்றும் அருட்தந்தை எஸ். நவாஜி ஆகியோர் நேற்று முன்தினம் கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியின் இறுதியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் இயேசுசபைத் தலைவர் அருட்தந்தை டெக்ஸ்ரர் கிறே இலங்கை யேசுசபை மாகாணத் தலைவர் அருட்தந்தை போல் சற்குணநாயகம் பொன்னாடை போர்த்தி, இராயப்பு ஜோசப்பினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வருடாந்த திருவிழாவின் திருச்சொரூபப் பவனி கடந்த சனிக்கிழமை மாலை நகரின் பிரதான வீதிகள் வழியாக இடம்பெற்றது.

கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நேற்று முன்தினம் கொடியிறக்கத்துடன் முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தொடர்ந்து கண்டியில் நிற்கிறது மோடியின் ஹெலி; இலங்கை விமானப்படையின் உதவி நிராகரிப்பு!

கொழும்பு, மே 16

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பயண அணியில் இடம்பெற்றிருந்த உலங்கு வானூர்தியைத் திருத்துவதற்கு புதுடில்லியில் இருந்து நிபுணர்களை அனுப்புவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

இதனால், கண்டி அஸ்கிரிய மைதானத்தில் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எம்.ஐ-17 உலங்குவானூர்திக்கு இலங்கைப் பொலிஸார் தொடர்ந்தும் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

இந்தியப் பிரதமர் கண்டியில் இருந்து கட்டுநாயக்க புறப்பட்ட போது, இந்த உலங்கு வானூர்தி பழுதடைந்தது. இதனால், அதனை அங்கேயே

## கோளாறைச் சரிபார்க்க வருகின்றனர் இந்திய தொழில்நுட்பக் குழுவினர்




விட்டுவிட்டு ஏனைய உலங்கு வானூர்திகள் மூலம் இந்தியப் பிரதமரும் அவரது குழுவினரும் புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

இலங்கைப் விமான படையினர் வைத்திருப்பது போன்ற எம்.ஐ.17 உலங்குவானூர்தியே பழுதடைந்த நிலையில் கண்டியில் தரித்து நிற்கிறது. இதனைத் திருத்துவதற்கு இலங்கை விமானப் படைப் பொறியியலாளர்கள் முன்வந்த போதும் இந்தியா அதனை ஏற்கவில்லை.

புதுடில்லியில் இருந்து தொழில்நுட்பக் குழுவினரை அனுப்பி விரைவில் அதனை திருத்திக் கொண்டு செல்வதாக அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமரின் பயண அணியில் இடம்பெற்ற உலங்கு வானூர்தியில் சிறப்பு பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதுபற்றிய இரகசியங்கள் கசிந்து விடக் கூடா என்பதற்காகவே, இலங்கை விமானப் படையின் உதவியை இந்தியா விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே, இந்தியப் பிரதமரின் பயணத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட மற்றொரு விமானத்திலும் தொழில்நுட்பக்கோளாறு ஏற்பட்டதாகவும், எனினும், அது உடனடியாகவே இந்திய பிரதமரின் அணியில் இருந்த தொழில்நுட்பக் குழுவினரால் சீர்படுத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(க)

## உயிரிழந்த பொலிஸ் அதிகாரிக்கு ஜனாதிபதி வழங்கிய கௌரவம்!



பிலியந்தலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் சேவையாற்றிய ஜே.ஏ.டீ. சமிந்த அபேவிக்ரம பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன இறுதி மரியாதை செலுத்தியுள்ளார்.

மாரவில வீரஹேன வாசனா மாவத்தையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகப் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அபேவிக்ரமவின் இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி மரியாதை செய்த பின்னர் அவருக்கு பதவியுயர்வு வழங்கி, பூதவுடலுக்கு உத்தியோகபூர்வ இலச்சினையை அணிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிலியந்தலையில் வங்கி ஒன்றுக்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே இந்தப் போதைப் பொருள்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவல்ஒன்றுக்குஅமைய பொலிஸ் அதிகாரிகள் சுற்றி வளைப்பை மேற்கொள்ளச் சென்றிருந்தனர்.

அப்போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலர் பொலிஸ் அதிகாரிகள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போதே இந்தப் போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோடியுடன் மஹிந்த பேசியது ரகசியம்; விவரம் வெளியிட மறுக்கிறார் பீரிஸ்!

கொழும்பு, மே 16

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய பேச்சு இரகசியமானது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமரை, மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை இரவு சந்தித்துப் பேச்சு நடத்தி இருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையை ஏற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவரான ஜி.எல்.பீரிஸ் இந்திய ஊடகவியலாளர் ஒருவருக்கு கருத்து வெளியிடுகையில்-



இந்தியப் பிரதமருடன் மஹிந்த ராஜபக்ஷ நடத்திய பேச்சு இரகசியமானது. அது பற்றி வெளிப்படுத்த முடியாது. இதனை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

கடைசி நேரத்தில் நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியப் பிரதமர் எங்களைப் பின்னிரவில் வரவேற்றார். - என்று குறிப்பிட்டுள்ளார்.

(எ)

## மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு புதிய மாணவர்களை இணைக்க வேண்டாம்!

கொழும்பு, மே 16

மாலபே தனியார் கல்லூரி தொடர்பில் அரசு எடுத்துள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் வரையில் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டாம் எனக் கோரப்பட்டுள்ளது என்று உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகங்களுக்கு அவர் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சின் ஊடாக அரசால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து மாலபே



உயர்கல்வி அமைச்சர்
லக்ஸ்மன் கிரியெல்ல
தெரிவிப்பு

தனியார் மருத்துவக் கல்லூரிகளிடம் சாதகமான முறையில் பதிலளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு முதலீடு செய்துள்ள நிறுவனங்களிடம் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடுதல். கல்வி மற்றும் நிர்வாகத்துக்காக உயர்தரத்தைக் கொண்ட கட்டுப்பாட்டுச் சபையை உருவாக்குதல், நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையை அரசு உள்வாங்குதல், தனியார் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களை அதிகரித்தல் உள்ளிட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நெவில் பெர்னாண்டோ தனியார் வைத்தியசாலை விரைவில் அரசு பொறுப் பேற்றுக்கொள்ளும் .- என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(க)

## இந்தியப் பிரதமரின் வருகையால் இலங்கை மக்களுக்கு நன்மை!

கொழும்பு, மே 16

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகை காரணமாக, நாட்டு மக்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைத்துள்ளன என்று வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய பிரதமர் தமது விஜயத்தின் போது வடக்கு, கிழக்கு, மற்றும் மலையகப் பகுதிகளுக்




அமைச்சர்
சஜித்
கூறுகிறார்

கான வீடமைப் புக்களுக்கான உதவிகளை அறிவித்தார்.

எனினும், மக்களுக்கான இந்த நன்மைகளைப் பொருட்படுத்தாது கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கறுப்பு கொடிகளை ஏந்தப்போகிறார்கள். எச்சரித்திருந்தமை கண்டிக்கத்தக்கது .- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் ஆய்வுப் பணிகளை நிறைவுசெய்தது இந்தியக் கப்பல்!



கொழும்பு, மே 16

இந்தியாவின் ஐ.என்.எஸ். டாரசாக் என்ற கிழக்கு கடற்படைக்குச் சொந்தமான கப்பல், கடந்த இரண்டு மாதங்களாக இலங்கையின் வெலிகம மற்றும் தென் கரையோரப் பகுதிகளில் மேற்கொண்ட ஆய்வை வெற்றிக்கரமாக முடித்துக்கொண்டதாக 'த ஹிந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இந்த ஆய்வறிக்கையை கப்பலின் கட்டளை அதிகாரி வைஸ் கப்டன் பேயுஸ் பாசே, இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ஆர்.சி.விஜே குணரத்னவிடம் கடந்த வார இறுதியில் கையளித்துள்ளார்.

இந்த ஆய்வு மூன்று கட்டங்களாக கொழும்புக்கும் காலி துறைமுகத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கப்பல் இரண்டு துறைமுகங்களுக்கும் சென்று திரும்பியது. இலங்கையின் கடற்படையினருக்கு ஆய்வுகள் தொடர்பான பயிற்சிகளும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த இந்திய கப்பல் ஏற்கனவே மொரிசீயஸ், சீசெல்ஸ், மியன்மார், தான்சானியா, மொசாம்பிக் ஆகிய நாடுகளிலும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் 306 முதியோர் இல்லங்களில்!

## அநேகம் பேர் பிள்ளைகளால் விடப்பட்டவர்கள் சமூக வலுவூட்டல் நலன்புரி அமைச்சு தகவல்

கொழும்பு, மே 16

இலங்கையிலுள்ள முதியோர் இல்லங்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட முதியவர்கள் தங்கியுள்ளனர். அவர்கள் 306 இல்லங்களில் உள்ளனர் என்று சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சு செயலகப் பணிப்பாளர் சுமிந்த சிங்கப்புலி தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆறு முதியோர் இல்லங்கள் அரசால் பராமரிக்கப்படுவதுடன், ஏனைய 300 முதியோர் இல்லங்களும் மாகாண சமூக சேவை திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

முதியோர் இல்லங்களில் தங்கி இருப்பவர்களின் அநேகமானோர் அவர்களின் பிள்ளைகளால் கொண்டு வந்து விடப்பட்டவர்கள். பிள்ளைகள் கவனிக்காமை மற்றும் பிள்ளைகளுக்கு பாரமரிக்க இருக்கக்கூடாது என்ற எண்ணத்திலும் சில பெற்றோர் இவ்வாறு முதியோர் இல்லங்களை நாடுகின்றனர்.

இதேவேளை, பிள்ளைகள் தங்களை உரிய முறையில் பராமரிக்கத் தவறியுள்ளனர் என்று தெரிவித்து பெற்றோர் 57பேர் முதியோர் செயலகத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் இவ்வாறான 57 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நாட்டின் மொத்த சனத்தொகையில் அதிகமாக 60 வயதைக் கடந்தவர்கள் 25 லட்சம் பேர் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# அதிக விலையில் அரிசி விற்பனை நுகர்வோர் அதிருப்தி, விசனம்!

அரசு நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலையில் அரிசி விற்பனை செய்யப் படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோகிராம் நாட்டரிசி 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என்று அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது.

எனினும், ஒரு கிலோ கிராம் நாட்டரிசி 85 ரூபா முதல் 90 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மேலும் சம்பா அரிசி ஒரு கிலோ 90 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என்று அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது.

ஆனால், ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 95 ரூபா முதல் 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

கீரி சம்பா ஒவ்வொரு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கே அரிசி உற்பத்தியாளர்கள் தமக்கு அரிசி வழங்குகிறார்கள் என அரிசி மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வெளிநாட்டு அரிசி வகைகளைக் கொள்வனவு செய்ய மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. அரசின் நிர்ணய விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோகிராம் அரிசியை உற்பத்தி செய்ய சுமார் 85 ரூபா செலவாகின்றது என்று அரிசி உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ)

# தினசரி ராசி பலன் 16.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 2 ஆம் நாள் பஞ்சமி பிற்பகல் 12.16 மணி வரை. பின்னர் உத்தராடம் பின் இரவு 4.37 மணி வரை. சித்தம் முழுவதும் இராகு காலம் 2.53 மணி முதல் 4.23 மணி வரை. சுபநேரம் 10.13 மணி முதல் 11.52 மணி வரை.

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.



**மேஷம்:** நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். புதிய அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**ரிஷபம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.



**மிதுனம்:** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.



**கடகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கு சாதகமாகும்.



**சிம்மம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.



**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.




**துலாம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்வீர்கள்.



**விருச்சிகம்:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.



**தனுசு:** விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். இரகசியங்களை வெளியிட வேண்டாம்.



**மகரம்:** குடும்பத்தில் சின்னச்சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியரின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.



**கும்பம்:** தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைச் கற்றுக் கொள்வீர்கள்.



**மீனம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும்.

# வைத்திய சபை வளாகத்தில் கைக்குண்டு; சிசிரிவி கமெரா காட்சிகள் மூலம் விசாரணை!

கொழும்பு, மே 16

இலங்கை வைத்திய சபை வளாகத்தில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காக சிசிரிவிக் காட்சிகளைப் பயன்படுத்தவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்பொருட்டு, வைத்திய சபைக்கு அருகிலுள்ள சிசிரிவி கமரா பதிவுகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தற்போது முன்னெடுத்துள்ளதாக, பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும், சம்பவ தினத்தன்று கடமைகளில் இருந்த காவலாளி உள்ளிட்ட சிலரின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு - 10 இல் அமைந்துள்ள இலங்கை வைத்திய சபையின் வளாகத்தில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தக் கைக்குண்டை அங்கிருந்த காவலாளி கண்டு, மருதானைப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதன்படி, மருதானை விஷேட அதிரடிப்படையின் ஒத்துழைப்புப் பெறப்பட்டுள்ளதோடு, அந்தக் கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. (வ)

# வேலை முடிந்து வந்த அம்மா எங்கே? அவரை மீட்டு எங்களிடம் கையளியுங்கள்!

## முல்லைத்தீவுச் சிறுமி உருக்கமாகக் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துள்ள தொடர் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று 70 ஆவது நாளாகவும் சோர்வின்றி முன்னெடுக்கப்பட்டது.

இறுதி யுத்தத்தின்போதும் அதற்கு பின்னரும் இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் கடத்தப்பட்டுக் காணாமற் போகச் செய்யப்பட்ட உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறுமி ஒருத்தி, தமது தாயார் எங்கே என்று கேள்வி எழுப்பி அழுதமை அனைவரையும் கவலையடையச் செய்தது.

அந்த சிறுமியும் அவரது இரு சகோதரர்களும் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து வவுனியா செட்டி குளம்; வலயம்04 முகாமில் இருந்தனர்.

வறுமையைப் போக்குவதற்காக அந்தப் பெண்மணி வவுனியா மாவட்டச்செயலகத்தில் உள்ள உணவகத்தில் வேலை செய்துவந்தார்.

2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி வேலை முடிந்து முகாமுக்குத் திரும்பிய அவர் காணாமற் போனார்.

தமது தாயைக் காணாமல் தாம் பெரும் துயரில் இருக்கின்றனர் எனக் கூறிய மேற்படி சிறுமி எப்படியாவது தாயைக் கண்டுபிடித்துத் தாருங்கள் என உருக்கமாகக் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, தனது மகள் காணாமல் போனதிலிருந்து அவருடைய பிள்ளைகளை வளர்க்க தாம் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றார் என காணாமற்போன பெண்ணின் தாயார் வயோதிபப் பெண்மணி தெரிவித்தார்.

இதுவரை கச்சான் விற்றே மூன்று பிள்ளைகளையும் வளர்த்தாளெனக்கூறிகின்ற அவர், தனக்கும் 66 வயதாகி விட்டமையால் கச்சான் விற்கச் செல்ல முடியவில்லை எனத் தெரிவித்தார். அதனால் பிள்ளைகளின் நலன் கருதி தமது மகளை விரைவாகத் தங்களிடம் கையளிக்குமாறும் கோரிக்கை விடுத்தார். (ம-81)




# ஜி.எஸ்.பி வரிச் சலுகை; ஈழத்தீவின் மீது ஏன் இந்தக் கரிசனை?

**கலாநிதி சேரமான்**

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீதான வாக்கெடுப்பில் இலங்கை அரசு வெற்றி பெற்றிருக்கின்றது.


மனித உரிமைகள், தனிநபர் உரிமைகள், அரசியல் உரிமைகள் உள்ளடங்கலான பன்னாட்டு விழுமியங்களுக்கு இசைவாக இலங்கை அரசு நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த 2010ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்தச் சலுகையை இலங்கை அரசிடமிருந்து ஐரோப்பிய ஒன்றியம் மீளப்பெற்றிருந்தது. இது பற்றி அப்பொழுது கருத்து வெளியிட்ட அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 'ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையைத் தருவதற்கு விருப்பமில்லை என்றால், அதனை அதுவே வைத்திருக்கட்டும். எனக்கு அது தேவையில்லை' என்று ஆணவமாகப் பதிலளித்திருந்தார்.

இதற்கு ஓராண்டுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் தமது உறவுகளை சிங்களம் கொன்று குவித்த பொழுது அதனைத் தடுத்து நிறுத்தாது உலகம் பாராமுகம் காட்டியதையிட்டு மனம் வெதும்பிப் போயிருந்த தமிழர்களுக்கு, ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு ஒத்தடமளிப்பதாக இருந்தது. இப்பொழுதாவது உலகின் கண்கள் திறந்து கொண்டன என்று அன்று தம்மைத் தாமே தமிழர்கள் ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள்.

## யார் ஆண்டால் என்ன?

இப்பொழுது ஈழத்தீவில் மஹிந்தரின் ஆட்சி இல்லை. நல்லாட்சி என்ற பெயரில் அவரது முன்னாள் அமைச்சரான மைத்திரியின் ஆட்சி நிலவுகின்றது. ஆனாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்ற கதையாகவே மைத்திரியின் நல்லாட்சி இருக்கின்றது. ஆள்கள் மாறியிருக்கின்றார்கள். ஆனால் இனவெறிகொண்ட அரச இயந்திரம் அப்படியேதான் இருக்கின்றது.

யதார்த்தம் இவ்விதம் இருக்கும்



பொழுது இலங்கை அரசுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளளிப்பதற்கு இப்பொழுது ஐரோப்பிய ஒன்றியம் எடுத்திருக்கும் முடிவு, மனித உரிமைகள், தனிநபர் உரிமைகள், அரசியல் உரிமைகள் போன்றவற்றுக்காக அல்லாது மஹிந்தரை ஆட்சி பீடத்தில் இருந்து தூக்கியெறியும் ஒரேயொரு நோக்கத்துடனேயே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை 2010 ஆம் ஆண்டில் அது விலக்கிக் கொண்டது என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியிருக்கின்றது.

இலங்கையின் ஆட்சிக்கட்டில் எப்பொழுதுமே திறந்தவெளிப் பொருண்மியக் கொள்கைகளுக்கு ஆதரவான போக்கையுடைய அரசியல் தலைவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் என்பது இன்று நேற்றல்ல, கடந்த 69 ஆண்டுகளாக மேற்குலகம் கொண்டுள்ள அவாவாகும்.

டி.எஸ்.சேனநாயக்க, ஜோன் லயனல் கொத்தலாவல, டட்லி சேனநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன எனத் திறந்த வெளிப் பொருண்மியக் கொள்கைகளுக்கு ஆதரவான சிங்கள அரசியல் தலைவர்கள் ஈழத்தீவின் ஆட்சிக்கட்டில் அமரும் பொழுதெல்லாம் மேற்குலகம் பரவசத்தின் உச்சத்துக்குச் செல்வதும், அதன் பின்னர், மனித உரிமைகள், தனிமனித உரிமைகள், அரசியல் உரிமைகள் எல்லாம் இரண்டாம் பட்சமாகி விடுவதும் கடந்த 69 ஆண்டுகளாக நடந்தேறுவதுதான்.

எனவே திறந்தவெளிப் பொருண்மியக் கொள்கைகளை ஆரத்தழுவிக் கொண்டுள்ள மைத்திரி-ரணில் அரசுக்கான சன்மானமாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள முடி வையிட்டு நாம் பெரிதாக ஆச்சரியப் படத் தேவையில்லைதான்.

## மஹிந்தரின் கனவு

ஈழத்தீவின் அரசியலில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சரி, ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் சரி இப்பொழுது இருக்கக் கூடிய மிகப்பெரும் கவலை மஹிந்தரின் மீள்வருகைக்கான சாத்தியக் கூறுகள்தான். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தர் போட்டியிட முடியாதபடி பத்தொன்பதாம் திருத்தச் சட்டத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மைத்திரி-ரணில் அரசு ஆப்பு வைத்துவிட்ட பொழுதும், தனது சகோதரர் கோட்டாபயவை அடுத்த அதிபர் தேர்தலில் களமிறக்கி, ஜனாதிபதி ஆசனத்தில் தனது தம்பி வீற்றிருக்கப் பிரதமரின் ஆசனத்தில் தான் அமர வேண்டும் என்பதுதான் இப்பொழுது மஹிந்தரின் கனவாகும்.

இதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வைப்பது போன்றே மைத்திரி-ரணில் அரசின் ஆட்சியும் காணப்படுகின்றது. மஹிந்தரின் ஆட்சிக் காலத்தில் தென்னிலங்கையில் வீறுநடைபோட்ட அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் இப்பொழுது தேக்க நிலையில் உள்ளன. மஹிந்தரின் ஆட்சியில் பாணின் விலையும், பருப்பின் விலையும் அதிகரித்ததால் வெதும்பிப் போய் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மைத்திரிக்கும், ரணிலுக்கும் வாக்களித்த சிங்கள வாக்காளர்கள் இப்பொழுது மஹிந்தர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பரவாயில்லை என்ற மனோநிலைக்குச்சென்று கொண்டிருக்கிறார்கள்.

இது போதாதென்று நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் என்ற கதையாகத் தென்னிலங்கையில் இப்பொழுது காலை, மாலை என்ற வேறுபாடின்றி வேலையற்ற பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டங்களும், தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்புக்களும் நிகழ்ந்தேறுகின்றன.

## ஜி.எஸ்.பி. வரிச் சலுகை வழங்க முன் வந்தது ஏன்?

இவற்றையெல்லாம் கொழும்பில் உள்ள மேற்குலகத் தூதரகங்கள் கண்டு கொள்ளாமல் இல்லை. ஈழத்தீவின் அரசியலைக் கண்ணுக்குள் எண்ணெய்யை ஊற்றிக் கொண்டு உன்னிப்பாக அவதானித்து வரும் மேற்குலக இராஜ தந்திரிகளின் முன் இப்பொழுதுள்ள மிகப்பெரும் சவால் மஹிந்தருக்கு ஆதரவான அரசியல் அலை தென்னிலங்கையில் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதுதான். இதற்காக இப்பொழுது மேற்குலகம் கையில் எடுத்துள்ள யுக்திதான் மைத்திரி-ரணில் அரசின் மீதான நெருக்கடிகளைக் குறைப்பது. இந்த யுக்தியின் வெளிப்பாடாகவே கடந்த பங்குனி மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அர சுக்கு இரண்டாண்டு கால அவகாசத்தை மேற்குலகம் வழங்கியது. இதே யுக்தியின் வெளிப்பாடுதான் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளளிப்பதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவும்.



ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெறுவதற்கான விண்ணப்பத்தைக் கடந்த ஆண்டின் முற்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை அரசு சமர்ப்பித்த பொழுதே இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் எவ்வளவுதான் தலைகீழாக நின்றாலும், தான் நினைத்ததையே ஐரோப்பிய ஒன்றியம் செய்யும் என்பது பெரும்பாலான தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்குத் தெரியும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை விவகாரத்தில் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் பலர் அலட்டிக் கொள்ளாமல் இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

அப்படியிருந்த பொழுதும் இலங்கை அரசுக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கிடைப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளில், பிரித்தானியா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் தனிப்பட்ட ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் சில செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டார்கள். தாம் சவால் விடுப்பது முழு உலகையும் தனது பக்கம் வளைத்து வைத்திருக்கும் இலங்கை அரசுக்கு எதிராக என்று தெரிந்த பொழுதும் கூட இவர்கள் யாரும் சளைத்து விடவில்லை. பெருமுதலாளிகளின் ஊடகங்களில் குந்தியிருந்து உழுத்துப் போன பூகோள அரசியல் கதைகளும், வரண்டு போன இடது சாரிவாதக் கருத்துக்களையும் பேசும் வீண் பேச்சு விண்ணர்களுக்கு மத்தியில் இப்படியான செயற்பாட்டாளர்கள் எடுத்த முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

இவர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியீட்டவில்லை என்பது வேறு கதை. இவர்களின் அழுத்தங்களை மீறி ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் நானூற்று முப்பத்தாறு உறுப்பினர்களைத் தன் பக்கம் இலங்கை அரசு வளைத்துக் கொண்டமையும், அவர்களின் ஆதரவுடன் கடந்த 27.04.2017 அன்று நடைபெற்ற ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெறும் வாக்கெடுப்பில் அது வெற்றி பெற்றமையும் வேறு கதை.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, இவ்விடயத்தில் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தின் நூற்றுப் பத்தொன்பது உறுப்பினர்கள் எடுத்தமை ஒரு விதத்தில் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றிதான். அதாவது ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எழுநூற்று ஐம்பத்தொரு உறுப்பினர்களில் ஐம்பத்தெட்டு விழுக்காடு பேரின் ஆதரவை இலங்கை அரசால் பெற முடிந்துள்ளது என்றால், அதே நாடாளுமன்றத்தின் பதினாறு விழுக்காடு உறுப்பினர்களின் ஆதரவை ஓர் அரசாக அல்லாது, தனித்து நின்றும், அமைப்பு ரீதியாகவும் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் பெற்றிருப் பதானது, அவர்கள் எல்லோரும் தமிழீழத்தின் உண்மையான தூதுவர்களாக செயற்பட்டுள்ளார்கள் என்பதையே உணர்த்துகின்றது.

உலகின் மூலை முடுக்கெங்கும் இலங்கை அரசுக்குத் தூதரகங்கள் உள்ளன. அதே தூதரகங்கள் அமைந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும், அத் தூதரகங்களில் பணிபுரியும் சிங்கள இராஜ தந்திரிகளைவிடப் பன்மடங்கு எண்ணிக்கையில் தமிழர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவருமே தமிழீழத்தின் இராஜதந்திரிகள் என்ற பாத்திரத்தை வகிக்கத் தொடங்கினால் என்ன நடக்கும் என்று நினைத்துப் பாருங்கள்!

இதுதான் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை விவகாரத்தில் ஒரு சில செயற்பாட்டாளர்கள் எடுத்த முயற்சியின் விளைவாகத் தமிழர்களுக்கு ஆதரவாக நூற்றுப்பத்தொன்பது ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்த சம்பவம் வெளிப்படுத்தும் செய்தியாகும். ★

காலைக்கதிர்



# நாடு கடந்த தமிழீழ அரசு ஆரம்பித்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம்

மே 18 தமிழீழத் தேசிய துக்க நாளை மையப்படுத்திய முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் உணர்வெழுச்சியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மே 12 முதல் 18வரை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நினைவேந்தல் வாரமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் பிரிட்டனில் நாடு கடந்த தமிழீழ அரசின் அரசவை நினைவேந்தல் வாரத்தை முறையாகத் தொடக்கி வைத்தது.

அரசவைத் தலைவர் நாகலிங்கம் பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றிருந்த இந்தச் சிறப்பு அமர்வில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் நினைவேந்தல் உரையை வழங்கியிருந்தார்.

தொடர்ந்து அவைத்தலைவர், அமைச்சர்கள், அரசவை உறுப்பினர்கள் தங்கள் நினைவேந்தல் வணக்கத்தைத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஈழத் தமிழினத்தின் மீதான சிங்கள அரசினது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் உச்சமாக மே 18, 2009 ஆம் ஆண்டில் கொத்துக் கொத்தாக பல்லாயிரக்கணக்கான எமது உறவுகள் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழ் மக்களின் அரசியல் பெருவிருப்பை வெளிப்படுத்துவதற்கான அரசியல் வெளியை உருவாக்கி உலகுக்கு பறைசாற்றி நிமிர்ந்திருந்த நடைமுறைத் தமிழீழ அரசு அழிக்கப்பட்டு தமிழர் தேசம் சிங்களத்தால் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டது.

இது தமிழீழம் நோக்கிய விடுதலைப் பயணத்தில் பெருந்துயர் எம்மை ஆட்கொண்ட துக்கநாள் !

இந்த நாள்களில் ஆக்கிரமிப்பாளர்களால் நரபலி எடுக்கப்பட்டு தமது இன்னுயிர்களை இழ்ந்த எமது உறவுகளையும் சிங்களத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நின்று போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவேந்தி வணக்கம் செய்வோம்.

முள்ளிவாய்க்கால் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கியமான ஒரு கூட்டு நினைவு ஆகும். யூதர்கள்மேல் நாஜிகளால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு எவ்வாறு யூத மக்களிடையே ஒரு வரலாற்றுக் கூட்டு நினைவாக அமைந்ததோ அதேபோல தமிழர்களுக்கு, ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களுக்கும் முள்ளிவாய்க்கால் ஒரு முக்கியமான கூட்டு நினைவாக அமைகிறது. தமிழருக்கு எதிரான இனப்படுகொலையின் ஓர் இரத்தச் சாட்சியமாக இருக்கிறது.

துயர்தோய்ந்த, அவலம் நிரம்பிய கூட்டு நினைவுகள் ஒரு மக்கள் கூட்டத்தின் ஆழ் மனதில் காலம் காலமாக நிலைத்து நிற்கக் கூடியவை. வரலாற்றை மாற்றும் சக்தி கொண்டவை. யூத மக்களின் தமக்கான தனி அரசு என்ற கனவு நாஜி இனப்படுகொலையின் பின்னர்தான் சாத்தியமாகியது. பலஸ்தீன மக்களுக்கென எதிர்காலத்தில் உருவாகவிருக்கும் தனி அரசும் இம் மக்கள் தாம் அனுபவித்து வரும் ஒடுக்கு முறைகளின் கூட்டு நினைவை அரசியல் இயக்கமாகத் தொடர்ச்சியாகப் பேணி வருவதால்தான் சாத்தியமாகப் போகிறது.

தமிழீழத் தேசிய துக்க நாள் நாம் துயரத்தால் துவண்டு போகும் நாள் அல்ல. மாறாக நமது மக்கள் அடைந்த துயரத்தையும் துன் பத்தையும் அவலத்தையும் நமக்குள் உயிர்ப்பாய் உள்வாங்கி நாம் ஒரு தேசமாக பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் வாழ்வ தற்கு சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசை அமைப்பதே ஒரேவழி என்பதை நமக்குள் நாமே உறுதி பூணுவோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





## ஜேர்மன் தமிழ்க் கல்விக் கழகத்தின் 27 ஆவது அகவை நிறைவு விழா

ஜேர்மனியில் 27 ஆண்டுகளாக அங்கு பரந்து விரிந்து வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியையும் பண்பாடுகளையும் கற்றுக்கொடுத்த பெருமையோடு 27 ஆவது அகவை நிறைவு விழாவைத் தமிழ்க் கல்விக் கழகம் அண்மையில் வட மாநிலத்தில் கனோவர் நகரில் கோலாகலமாகக் கொண்டாடியது.

விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும் அவரின் துணைவியார் பேராசிரியர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸும் கலந்து கொண்டனர். அவர்களுடன் சிறப்பு விருந்தினராக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஜேர்மனிக் கிளையின் பொறுப்பாளர் யோ.ஸ்ரீ ரவீந்திரநாதனும் கலந்துகொண்டார். (ஐ)




## கனடா முள்ளிவாய்க்கால் நிகழ்வில் தமிழகத்திலிருந்து உமா நெடுமாறன்

கனடாவில் நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் சிறப்புப் பேச்சாளராக தமிழகத்திலிருந்து உமா நெடுமாறன் கலந்து கொள்கின்றார்.

பழ நொடுமாறனின் மகளான இவர் பல வருடங்களாக ஈழத் தமிழர்களின் மனித உரிமை செயற்பாட்டில் தொடர்ச்சியாகக் கலந்து கொண்டு குரல் கொடுப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழின அழிப்புக்கு நீதி கோரி ஜேர்மனியில் தொடரும் விழிப்புணர்வு



ஜேர்மனியில் தமிழின அழிப்புக்கு நீதி கோரும் விழிப்புணர்வு ஊர்திப் பயணம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



தமிழின அழிப்பை எடுத்துரைக்கும் கண்காட்சி, பதாகைகளை அமைத்து வேற்றின மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களும் இதன் போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மனித உரிமைகளுக்காக இந்தப் பயணம் நடத்தப்பட்டு வருகின்றது.



தொடர்ந்து எதிர் வரும் 18 ஆம் திகதி வரை இந்தப் பேரணி நடத்தப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)



## தமிழின அழிப்புக்கு நீதி கோரி ஸ்கொட்லாந்தில் சைக்கிள் பயணம்!

தமிழின அழிப்புநினைவு நாளான எதிர்வரும் 18 ஆம் திகதியை முன்னிலைப் படுத்தி அதற்கு நீதி கோரி சைக்கிள் தொடர் பயணம் ஸ்கொட்லாந்தில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

எடின்பேர்க்கில் உள்ள ஸ்கொட்டிஸ் நாடாளுமன்ற முன்றிலிலிருந்து இந்தச் சைக்கிள் பயணம் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது க்ளாஸ்கோ, பென்றித், மான்செஸ்டர், பேர்மிங்காம், கவுன்றி, மில்டன்கிங்ஸ் மற்றும் லூட்டன் வழியாக பயணித்து இறுதியாக எதிர்வரும் 18 ஆம் திகதி இன அழிப்பு நினைவு நாள் நடைபெறும் இலக்கம் 10 டவுனிங் வீதியை இந்தச் சைக்கிள் பயணம் வந்தடையவுள்ளது.

517 மைல்கள் கொண்ட இந்த பயணப் பாதையில் நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார் உட்படப் பலர் பங்கேற்கவுள்ளனர்.

பிரித்தானியா வாழ் அனைத்து மக்களிடமும் தமிழ் இனத்தின் அழிப்புக் குறித்தும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தத் தொடர் சைக்கிள் பயணம் நடைபெறுகிறது என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஐ)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




147

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### சிறிலங்கா அமைச்சருடனான சந்திப்பு

வடக்கு கிழக்கிலுள்ள சிக்கலான கள நிலைவரம் பற்றியும், தடைநீக்கப் பிரச்சினையில் இரு தரப்பினரதும் நிலைப்பாடு பற்றியும் நோர்வே சமாதானத் தூதுவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்க முடியாத ஒரு முடக்க நிலை ஏற்பட்டுள்ளதாகவே அவர்கள் கருதினார்கள். இந்தச் சூழ்நிலையில் தான் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி, நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன், எரிக் சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த திருமதி லீசா கோல்டன் ஆகியோர் லண்டனில் என்னைச் சந்தித்தனர். தாய்லாந்து நாட்டில் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஹெல்கிசன் என்னிடம் வினவினார். விடுதலைப் புலிகள் மீதான தடை அகற்றப்பட்டதுடன் போர்நிறுத்த விதிகளும் கடப்பாடுகளும் சீரிய முறையில் நிறைவு செய்யப்பட்டாலன்றிப் பேச்சுகளைத் தொடங்குவது சாத்தியமில்லை என்று நான் விளக்கினேன். இந்த விவகாரத்தை ரணில் விக்கிரமசிங்க அரசுடன் பேசி, சீக்கிரமே ஒரு சாதகமான முடிவு எடுப்பதாக ஹெல்கிசன் உறுதியளித்தார். அமைதிப் பேச்சுகளுக்குப் பொறுப்பான ஒரு மூத்த அமைச்சரான மிலிந்த மொறகொட லண்டனுக்கு வரவிருக்கிறார் எனவும் அவரைச் சந்தித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கமாகக் கூறும்படியும் அவர் கேட்டுக் கொண்டார். நான் அதற்கு இணங்கினேன். இந்தச் சந்திப்பு, 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம், லண்டனிலுள்ள நோர்வேத் தூதரது இல்லத்தில் நிகழ்ந்தது. விடர் ஹெல்கிசனும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார். எனக்கு உதவியாக எனது மனைவி அடேலும் பங்கு பற்றினார். சிறிலங்கா அமைச்சர் ஒருவருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவருக்கும் மத்தியில் நிகழ்ந்த முதல் சந்திப்பு இதுவாகும். கள நிலைவரம் பற்றியும் சமாதானப் பேச்சுகள் பற்றியும் எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை நான் எடுத்துக் கூற, பொறுமையாகச் செவிமடுத்தார் மொறகொட. போர் நெருக்கடியைத் தணித்து, இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கு, இராணுவத்தினதும் கடற்படையினரதும் பகைமையான கடும்போக்கு முட்டுக்கட்டையாக அமைந்திருக்கிறது என நான் விளக்கினேன். எமது விடுதலை இயக்கம் பேச்சுகளில் பங்குகொள்வதாயின், அரசு விதித்த தடை அகற்றப்படுதல் அவசியமெனவும் சுட்டிக்காட்டினேன். தமிழ் மக்களின் சட்டரீதியான; அதிகாரபூர்வமான பிரதிநிதிகளாகவும், சமத்துவ பங்காளிகளாகவும் விடுதலைப் புலிகள் பேச்சுகளில் பங்குகொள்ள வேண்டும் என்ற நியாயப்பாட்டை அமைச்சர் மொறகொட ஏற்றுக்கொண்டார். வெகுசீக்கிரமே ரணில் விக்கிரமசிங்கவின் அரசு எமது இயக்கம் மீதான தடையை நீக்கி விடுமென அவர் உறுதியளித்தார். கள நிலைமையை நேரில் கண்டறிவதற்காகத் தமிழ்ப் பகுதிகளுக்கு ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள



விரும்புகிறார் எனவும் அவர் தெரிவித்தார். ஆக்கபூர்வமாக அமைந்த அந்தச் சந்திப்பு இரண்டு மணிநேரம் நீடித்தது. ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் மீண்டும் ஒஸ்லோ நகரில் சந்திப்பதற்கு நாம் இணங்கினோம்.

இந்தச் சந்திப்பை அடுத்து, தலைவர் பிரபாகரனுடன் தொடர்புகொண்ட நான், சிறிலங்கா அமைச்சருடன் நிகழ்ந்த கலந்துரையாடலின் உள்ளடக்கத்தை விவரமாகக் கூறினேன். எமது இயக்கம் மீதான தடையை நீக்குவதோடு, தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக எமது அமைப்பை அங்கீகரித்துப் பேச்சுகளை நடத்த ரணிலின் ஆட்சிப்பீடம் தயாராக இருப்பதாகவும் பிரபாகரனிடம் கூறினேன். போர்நிறுத்த ஒப்பந்தக் கடப்பாடுகளைக் கடைப்பிடிக்காது சிங்கள ஆயுதப் படைகள் காட்டும் கடும்போக்குக் குறித்து மொறகொட எவ்வித உறுதிமொழியையும் தரவில்லை என்றும், ஆயுதப் படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ரணில் அரசிடம் இருக்கவில்லை என்பதையும் அவரிடம் விளக்கினேன். அரசியல் தெளிவுடைய யதார்த்தவாதி என்பதால், ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் மத்தியிலான அதிகாரப் போட்டியும் பிணக்குப் பற்றியும் பிரபாகரனால் புரிந்துகொள்ள முடிந்தது. போர்நிறுத்த உடன்பாட்டு விதிகள் சீரிய முறையில் நடைமுறையாக வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க விரும்பிய போதும் அதற்கான அதிகாரம் அவரிடம் இருக்கவில்லை. சந்திரிகாவுடனான பகையுணர்வு கூர்மையடைந்து இருந்ததால், இராணுவ விவகாரத்தில் ஜனாதிபதியுடன் ஒத்துழைப்பையும் அவரால் பெற முடியவில்லை. இந்தச் சிக்கலையும் ரணிலின் இயலாத்தன்மையையும் பிரபாகரன் நன்கறிவார். விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு அகற்றிவிட்டால் தாய்லாந்தில் சமாதானப் பேச்சுகளை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்த பிரபாகரன், போர்நிறுத்த உடன்பாட்டின் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்துப் பேச்சு மேசையில் பேசலாம் எனவும் தெரிவித்தார். தடை நீக்கம் நடைபெறும் பட்சத்தில், செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் தாய்லாந்தில் பேச்சுகளை ஆரம்பிக்கலாமெனவும் பிரபாகரன் தெரிவித்தார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சனின் அழைப்பை ஏற்று, ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் நானும் அடேலும் ஒஸ்லோ நகர் சென்றபோது அங்கு அமைச்சர் மிலிந்த மொறகொடவை மீண்டும் சந்தித்தோம். நோர்வே வெளிவிவகார அமைச்சுக் காரியாலயத்தில் நிகழ்ந்த இந்தச் சந்திப்பின்போது, சிறிலங்கா சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேனார்ட் குணதிலகவும் கலந்துகொண்டார். நோர்வே தரப்பில் விடர் ஹெல்கிசன், எரிக் சொல்ஹெய்ம், ஜோன் வெஸ்ட்பேர்க், திருமதி லீலா கோல்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் மீதான தடை, நீக்கம் செய்யப்படுவதை அடுத்து, 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் தாய்லாந்தில் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதென இந்தச் சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டது. பேச்சுகள் நிகழும் திகதியையும் மற்றும் விவரங்களையும் நோர்வே அரசு அறிவிக்குமென நோர்வே பிரதிநிதிகள் தெரிவித்தனர். போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளை நிறைவு செய்தல், இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்தல் போன்ற பிரச்சினைகளும் இந்தச் சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டன. நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீட்டர்சன், விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய என்னையும் அடேலையும், சிறிலங்காப் பிரதிநிதிகளையும் தனித்தனியே சந்தித்து, பேச்சுகள் வெற்றிபெறத் தனது அரசின் ஆசியைத் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நிகழ்ந்த இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, செப்ரெம்பர் மாதம் 6 ஆம் நாள், அதாவது, சமாதானப் பேச்சுகள் தொடங்குவதற்குப் பத்து நாள்களுக்கு முன்னராக, விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுமென ரணிலின் அரசு அறிவித்தது. இதற்கு அமைய, செப்ரெம்பர் மாதம் 5 ஆம் நாள் நள்ளிரவு, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் வர்த்தமானிப் பிரகடனத்தை வெளியிட்டார்.

இது இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் சிறிலங்கா அரசுக்கும் மத்தியில் அதிகாரபூர்வமான முதற்கட்டப் பேச்சுகள் தாய்லாந்திலுள்ள சற்றாகீப் கடற்படைத் தளத்தில் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16 திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறுமென நோர்வே அரசு அறிவித்தது. இரு தரப்பினரும் நான்கு பிரதிநிதிகள் கொண்ட குழுக்களாக நோர்வே சமாதானத் தூதுவர்களின் அனுசரணையுடன் பேச்சுகளைத் தொடங்குவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

(தொடரும்...)

# ஞானச்செருக்கு மிக்க ராங்கிக்கார 'ஜென்ரில்மன்' எஸ்.டி.சிவநாயகம்



வி.என்.மதியழகன்

நன்மதிப்பை உடைமையாக்க முயற்சிப்பதிலும் பார்க்க அதற்குத் தகுதி பெறுவது மேலானது என்ற கோட்பாட்டின்அடிப்படையில்தமக்கென்று ஒரு தனித்துவம் பேணிவந்தவர் - இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையுலகின் ஜாம்பவான் எனப் போற்றிப் புகழப்படும் அமரர் எஸ். டி. சிவநாயகம். துணிச்சலாக நின்று எழுத்துலகில் ஜெயித்துக் காட்டியவர் அரசியல் பத்தி எழுத்தை தமிழில் முதலில் ஆரம்பித்தவர் என்ற சிறப்பான இடம் சிவநாயகத்துக்கு உண்டு.

செய்தியாளர்கள் அர்ப்பண சிந்தை மிக்கவர்கள். சுதந்திரமாக எழுத விரும்புவார்கள். அவர்கள் எதற்கும் அச்சம் அடையாதவர்கள். வாசகர்களுக்கேயன்றி வேறெவர்க்கும் விசுவாசம் காட்டாதவர்கள். இவற்றில் ஏதாவது ஒன்றை இழந்தால் செய்தியாளர்களின் சுய ஆளுமை பாதிக்கப்பட்டு விடும் என்ற கொள்கைப் பிடிப்பு உழைக்கும் பத்திரிகையாளராய் விளங்கிய சிவநாயகத்தின் நாடித்துடிப்பாக இருந்தது. சுயவிளம்பரம் தேடிப் போகாத வித்தியாசமான விவேகி. விழாக்களைத் தவிர்த்து விடுவார். தனது புகைப்படங்கள் பத்திரிகையில் வெளிவருகின்றமையை விரும்பாதவர். நம்பிக்கை நிறைந்த ஒருவர் என்பதால் அவர் யாருக்கும் மண்டியிட்டவரல்லர்.

இரண்டாயிரமாம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருபத்தியிரண்டாம் திகதி சனிக்கிழமை இயற்கை எய்திய எஸ். டி. சிவநாயகத்தின் பதினேழாவது சிரார்த்த தினம் அன்னாரது குடும்பத்தினரால், அவரை ''ஆசிரியர்'' என அழைத்து மதிப்பளித்து வந்த ஊடகவியலாளர்களால், இதழியலாளர்களால், இலக்கியச்சிறப்பு உள்ளவர்களால் கடந்த மாதம் அனுசரிக்கப்பட்டிருக்கிறது.

சிவநாயகம் திருகோணமலையில் பிறந்தவர். மட்டக்களப்பைச் சேர்ந்த மங்களவதி என்பவரை மனையாளாக்கி சிறந்த இல்லறம் நடத்தியவர். இந்திரஜித், செந்தில்குமார், உதயநாயகம் என மூன்று புதல்வர்கள் உள்ளனர். ''வையிற் றீடிங்''மானா மக்கீன் சிவநாயகத்தின் நினைவஞ்சலி தினம் பற்றி முகநூல்மூலமாக எனக்கு ஞாபகமூட்டினார். உடனடியாக கொழும்பு, பம்பலப்பிட்டியில் வாழும் உதயநாயகத்துடன் தொலைபேசி வாயிலாகத் தொடர்பை ஏற்படுத்தினேன். அவர் அடுத்த ஆண்டு,''எனது தந்தையின் நூற்றாண்டு ஜெயந்தி தினம் கடைப்பிடிக்கப்படும். மறந்து போனீரோ''எனக் கேட்டார். என்ன வேகமாய் காலம் ஓடிக் கொண்டிருக்கிறது என எண்ணியவாறே எடுத்தேன் என் பேனாவை - வாயாரப் பாடுகிறேன் என் வாழ்நாளில் முதற் தடவையாய் என் குருவின் திருப்புகழை.

அவரது பெயர் சொல்லி செருக்குறும் பல மாணவர்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி துறைகளில் இன்றும் பணியாற்றி வருகின்றனர். சிவநாயகத்தின் தினபதி - சிந்தாமணி பயிற்சிப் பாசறையில் சேர்ந்திருந்த பலர் புலம்பெயர்ந்து உலகெங்கிலும் பரந்திருக்கிறார்கள்.

சிவநாயகத்தை எந்த இடத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில் சந்தித்தாலும் என்னைக் கட்டியணைத்து ''இவர் எனது சிஷ்ஷியர்''என சூழ்ந்திருப்பவர்களுக்கு சொல்லிக் கொள்வார். அப்போதெல்லாம் என் மனதில் ஏற்பட்ட நெகிழ்ச்சியினை வார்த்தைகளில் வடித்துவிட முடியாது. ஓர் ஊடகவியலாளர் எப்படி இருக்க வேண்டும் என்ற பாடத்தை எனக்கு எக்கச் சக்கமாக ஊட்டிவிட்டவர் சிவநாயகம்.



கொழும்பு நீதிமன்ற கட்டடத் தொகுதி அமைந்திருக்கும் ஹல்ஸ்டோர்(க)ப் -மிஹிந்து மாவத்தையில் உள்ள பெரிய அடுக்குமாடிக் கட்டடத்தில் எம். டி. குணசேனா நிறுவனத்தின் சுயாதீன பத்திரிகை சமாஜம் செயற்பட்டு வந்தது. சிங்கள மொழியில் ''தவஸ'', ஆங்கில மொழியில் ''சன்'' நாளேடுகள், வார வெளியீடுகள் வெளியானமை போல், தினபதி நாளேடும், சிந்தாமணி வார வெளியீடும் பிரசுரிக்கப் பட்டு வந்தன. சிவநாயகத்தை பிரதம ஆசிரியராகக் கொண்ட தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடம் ஒரு பல்கலைக்கழகமென மிளிர்ந்தது. சிவநாயகம் ஒரு கம்பீரமான துணை வேந்தர்போலவே திகழ்ந்தார். அவரிடம் நானும் படித்தேன் - ஊடகத்துறையின் அடிப்படைப் பாடங்களை.

எஸ். டி. எஸ் ஸின் பத்திரிகைத் துறை அனுபவ வரலாற்றை இன்னும் சற்று பின்னோக்கிப் பார்ப்போம். எஸ். டி. சிவநாயகம் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றியபோது தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சியை உயர்த்தி வைக்கும் வகையிலான அரசியல் கட்டுரைகளை ஆணித்தரமாக எழுதிவந்தவர். வாசகர்களின் கேள்விகளுக்கு ''குயுக்தியார்'' என அவதாரம் எடுத்து அவர் எழுதிய பதில்கள் வாசிப்போரை வியக்க வைத்தன. சிவநாயகத்தின் விவேகம் சுதந்திரன், வார இதழ் விற்பனையில் பெரும் வேகத்தை ஏற்படுத்தியது. தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியில் அவருக்கிருந்த பங்கு அதிகம்.

வீரகேசரி பத்திரிகை அதன் தொடக்க காலம் தொட்டு தமிழகத்தைச் சேர்ந்தவர்களையே ஆசிரியர்களாகக் கொண்டிருந்தது. அது இலங்கையர் ஒருவரை ஆசிரியராக நியமித்து வெளிவர ஆரம்பகர்த்தாவெனத் திகழ்ந்தவர் சிவநாயகமே.

ஆயினும், 1966 - இல் அவர் வீரகேசரியை விட்டு வெளியேறினார். 'சுயாதீன பத்திரிகா சமாஜத்தில் சேர்ந்து கொண்டார். தினபதி -நாளேடு சிந்தாமணி-வாரவெளியீடு என்பவற்றின் பிரதம ஆசிரியர் பொறுப்பை வகிக்கத் தொடங்கினார். இலங்கை பத்திரிகைத் துறைவரலாற்றில்புதிய சகாப்தம் உதயமானது.

தினத்துக்கு அதிபதியான வன் கிழக்கில் உதிக்கும் சூரியன். அதையே மனதில் வைத்து புதிய நாளேட்டுக்கு தினபதி எனப் பெயர் வைத்தார். கேட்டதையெல்லாம் கொடுக்கும் தேவமணி என்ற அர்த்தம், சங்கத் தமிழ் மூன்றும் தந்த சிந்தாமணிப் பிள்ளையார் என்ற விநாயகப் பெருமானின் ஒரு நாமம் என்பவற்றை ஒருங்கிணைத்து வார வெளியீட்டுக்கு சிந்தாமணி எனப் பெயர் வைத்தார். சீவகசிந்தாமணி இலக்கியமும் அவர் மனதில் இருந்தது. படித்தவர்கள், பண்டிதர்களை மட்டுமல்லாது பாமரர்களையும் கவரக்கூடிய அம்சங்களையெல்லாம் அவற்றில் அறிமுகப்படுத்தினார்.

தினபதியில் கே. ரட்ணசிங்கம், சிந்தாமணியில் ராஜ அரியரட்ணம் என்போர் சிவநாயகம் என்ற ஊடக மன்னனின் சேனாதிபதிகள் என விளங்கி அவருக்கு உறுதுணை வழங்கினர். தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை இன்றும் கூட பலர் பாராட்டி மகிழ்கின்றனர் அந்த நாள் ஞாபகத்தில். கலை, இலக்கிய, அரசியல், பயணக் கட்டுரைகள் மட்டுமல்லாது தினபதியின் அத்தாணி மண்டபத்தில் அரசகேசரியாக அமர்ந்திருந்து படிப்போருக்கு புத்துணர்வூட்டும் சொல்லாட்சி நடத்தியவர் சிவநாயகம்.

''இலக்கியச் செம்மல்'' சிவநாயகம் ஒரு தலைசிறந்த எழுத்தாளர் மட்டுமல்லர், புகழ் பூத்த கவிஞரும் கூட. இவர் யாத்த அருமையான அழகு தமிழ் மரபுக் கவிதைகள் சிந்தாமணியின் முதற்பக்க முகப்புப் படங்களுக்கு மிகுந்த சுவை கொடுத்தன. அவற்றைத் தானே எழுதிவருகிறேன் என ஒரு போதும் அவர் வெளியே பறைசாற்றிக் கொண்டவரல்லர்.

ஒரு பத்திரிகையை வாசகர்கள் விரும்பி வாசிக்கத் தூண்டும் யுக்திகள் தெரிந்திருந்தவர். வாசகர் இதயங்களை ஊடுருவும் வகையில் சுவைபட எழுதும் நேர்த்தி அவரிடமிருந்தது. அதே வேளையில் இலக்கியத் தூய்மை, மொழித் தூய்மை என்பவற்றை மெய்யாகப் பேணுவதில் அவர் எப்போதுமே விட்டுக் கொடுத்தவரல்லர். இனிய தமிழில் சிந்தாமல், சிதறாமல் கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் வெகு சமர்த்தராக விளங்கியவர். எழுத்திலும், சொந்த வாழ்விலும் நேர்மையாளராக, நாணயமானவராக நடந்து கொண்டவர். இருந்தாலும் பத்திரிகையாளருக்குரித்தான ''திமிர்'' அவரிடம் அதிகம் இருந்தது. ''ஓர்மம்'', ''நெஞ்சுரம்'' மிக்கவராகவும் விளங்கியவர். சிவநாயகத்தை ஒரு ''ராங்கிக்கார ஜென்ரில்மென்'' என நான் விவரித்தால் அவரை நன்கு அறிந்தவர்கள் அதை மறுக்கமாட்டார்கள். அவரது ராங்கித்தனம் தினபதி, சிந்தாமணி, பின்னர் சூடாமணி பத்திரிகைகளில் பிரதிபலித்தன. அதுவே பல்லாயிரக்கணக்கான வாசகர்களை வரவேற்று வெகுவாக அவர் பக்கம் சாய்த்தது என்று கூடச் சொல்லலாம். அவரது எழுத்தின் வலிமை பரபரப்பை ஏற்படுத்தும்; அமோக வரவேற்பைக் கொடுக்கும். சிவநாயகத்தின் ஊடக ஆளுமைக்குப் பலம் சேர்த்த ராங்கித்தனத்துக்கு மேலாக ஒரு ஆன்மீக எழுச்சியும் கூடவே இருந்தது. ஓய்வுக் காலத்தில் அவர், கொழும்பு ஸ்ரீ சத்தியசாயிபாபா நிலையத்தின் தலைவராக விளங்கி சாயி பக்தர்களுக்கு சேவையாற்றி வந்தவர். புட்டபர்த்தியுடன் அதீத இட்டம் காட்டி வந்த தீவிர சாயி பக்தர்.

நான் விவசாயத்துறை பட்டப் படிப்பில் ஈடுபட்டவன். ஆனால் என்னுடன் படித்தவர்களைப் போல நல்ல வருமானம் தரவல்ல தோட்டத் துறையில் உத்தியோகம் தேடிப் போகவில்லை. பத்திரிகைத் துறையில் காலடி வைக்கவே மனம் நாடியது.

(தொடரும்...)

செய்தியாளர்கள் அர்ப்பணசிந்தை மிக்கவர்கள். சுதந்திரமாக எழுத விரும்புவார்கள். அவர்கள் எதற்கும் அச்சம் அடையாதவர்கள். வாசகர்களுக்கேயன்றி வேறெவர்க்கும் விசுவாசம் காட்டாதவர்கள். இவற்றில் ஏதாவது ஒன்றை இழந்தால் செய்தியாளர்களின் சுய ஆளுமை பாதிக்கப்பட்டு விடும் என்ற கொள்கைப் பிடிப்பு உழைக்கும் பத்திரிகையாளராய் விளங்கிய சிவநாயகத்தின் நாடித்துடிப்பாக இருந்தது.

## இரட்டைக்கொலை; சந்தேகநபர் கைது!



கொழும்பு, மே 16

கொஸ்கொட - பொரளுகெடிய பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் சரணடைந்துள்ளார்.

65 வயதான சந்தேகநபர் கடுவில - அகுங்கல்ல பகுதியைச் சேர்ந்தவர்.

சந்தேகநபரை பலபிட்டிய நீதிவான் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மையில் கொஸ்கொட - பொரளுகெடிய பகுதியில் பெண் ஒருவர் மற்றும் ஆறு மாதக் குழந்தை ஒன்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# கண்டிப் பிரகடனத்தின் ஊடாகவே சர்வதேச பிரச்சினைகளுக்குத் தீர்வு!

## சர்வதேச வெசாக் தின இறுதிநாள் நிகழ்வில் ஜனாதிபதி



கண்டிப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடைவதன் நோக்கில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பேண்தகு அபிவிருத்தி மற்றும் பேண்தகு சமாதானத்தின் குறிக்கோள்களை அடைவதனூடாக சர்வதேச பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதன் பொருட்டு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கண்டி பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பௌத்த நாடுகளின் ஒன்றிணைந்த செயற்திட்டத்திற்கு தலைமைத்துவத்தை வழங்குவதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

சர்வதேச வெசாக் தின இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல தசாப்தங்களின் பின்னர் இலங்கைக்கு இவ்வாறான தொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவ்வாறான தொரு பௌத்த மாநாட்டை இலங்கையில் நடத்த கிடைத்தமை பெரும்பாக்கியமாகவே கருத முடிகின்றது. இந்திய பிரதமர் மற்றும் நேபாள ஜனாதிபதி உள்ளிட்ட 72 உலகநாடுகளின் முக்கியஸ்தர்கள் இலங்கை வந்துள்ளமை என்பது எளிதான விடயமல்ல.

நிலையான அபிவிருத்தி மற்றும் நிலையான சமாதானம் என்பவற்றைக் கருப் பொருளாகக் கொண்டு சர்வதேச பௌத்த மாநாடு நடைபெறுகின்றது. உலக மக்களுக்கு பௌத்த தர்ம சிந்தனைகளைக் கற்பிக்க வேண்டிய தேவை தற்போது காணப்படுகின்றது. இதனால்தான் இங்கு வருகை தந்த 72 நாடுகளின் இணக்கப்பாட்டுடன் கண்டி பிரகடனம் அறிவிக்கப்படுகின்றது.

பௌத்த தர்மத்தின் எதிர்கால உலக நடவடிக்கைகள் தொடர்பில் பிரகடனம் ஒன்றை வெளியிடக் கிடைத்தமை இலங்கைக்கு முக்கியமான தாகும். உலகில் அனைத்து இடங்களிலும் மோதல்கள் காணப்படுகின்றன. இவ்வாறான மோதல்கள் குடும்பத்திலிருந்து அனைத்து இடங்களிலும் காணப்படுகின்றன.

அதனால் கண்டி பிரகடனத்தின் ஊடான உலகம் வாழ் அனைத்து பௌத்தர்களையும் ஒன்றிணைத்து சர்வதேச வலையமைப்பை உருவாக்கி உலக சமாதானத்துக்காகச் செயற்பட வேண்டியுள்ளது. இது பெருமைக்குரிய விடயம்.

கண்டிப் பிரகடனத்தின் ஊடாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது. எனவே, கண்டி பிரகடனத்துக்காக அனைத்து உலக பௌத்த நாடுகளும் ஒன்றிணைந்து வலையமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். இதற்கு தலைமைதாங்க இலங்கை பங்களிப்புடன் செயற்படும். -என்றார். (வ)

# சிங்கப்பூர் – இலங்கை இடையே விரைவில் வர்த்தக உடன்படிக்கை

கொழும்பு, மே 16

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கை எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் கைச்சாத்திடப்படும் என்று சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் மலிக் சமர விக்கிரம தெரிவித்துள்ளார்.'

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனக்கம்பனியுடனும் இந்த வருடத்துக்குள் புதிய வர்த்தக உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட அரசு எதிர்பார்த்துள்ளது.

சர்வதேச உறவுகளை விரிவுபடுத்தி நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது தற்போதைய அரசின் கொள்கையாகும். இதற்கு சர்வதேச சமூகத்தின் உயர்ந்த பட்ச ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளது.

சிங்கப்பூருடன் வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் புதிய சுதந்திர வர்த்தகவலயத்தை அமைக்க சந்தர்ப்பம் கிட்டும். இதன் மூலம் தொழில் இன்மைக்கு தீர்வு கிடைக்கும். -என்றார். (எ)

## வீட்டில் தீ; ஒருவர் காயம்!

கொழும்பு, மே 16

கொழும்பு, முகத்துவாரம் - கல்வலை சந்திக்கு அருகிலுள்ள பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)



தலதா மாளிகையில் நடைபெற்ற சர்வதேச வெசாக்தின நிகழ்வுகளில் நேபாள ஜனாதிபதி பித்தியாதேவி பண்டாரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இறுதிநாள் நிகழ்வு கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நேபாள ஜனாதிபதியின் வருகையை நினைவுகூரும் வகையில் ஜனாதிபதியால் நேபாள ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்று வழங்கப்பட்டது. (வ)

# மலையகத்தில் மோடி ஆற்றிய உரை பிரிவினைவாதத்தை உருவாக்கும்!

## சாடுகிறது தேசிய பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம்


கொழும்பு, மே 16

இலங்கைக்கு வருகை தந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நோர்வூட்டில் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்துக்கு ஆற்றிய உரை புதிய பிரிவினைவாதத்தை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளதாக தேசிய பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் சாடியுள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் சன்ன ஜய சுமன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மோடியின் உரை மலையக பெருந்தோட்ட மக்களை மட்டும் முன்னிலைப்படுத்தும் வகையில் அமைந்தது. ஏனைய தமிழ் சமூகம் பற்றிப் பேசவில்லை. பெருந்தோட்ட மக்கள் இந்தியக் கலாசாரத்தைப் பின்பற்றுகின்றனர் என்று புகழ்ந்துரைத்த மோடி அதன் ஊடாக, அவர்கள் இலங்கை கலாசாரத்துடன் ஒன்றிணைக் கின்றமையை மறைமுகமாகத் தடுத்து நிறுத்த முயற்சிக்கின்றார்.



இந்திய புலம்பெயர் சமூகம் என்று மலையகப்பெருந்தோட்ட மக்களை அவர் விளித்தமை கண்டனத்துக்குரியது. இவ்வாறான பிழைகள் மீளவும் இடம் பெறக்கூடா. மலையக பெருந்தோட்ட மக்களை மோடி தமது இந்திய மாநில மக்களாகக் கருதக்கூடாது.-என்றுள்ளது. (வ)

## முதலீட்டாளரை ஊக்குவிக்கும் வகையில் விசேட வரிச்சலுகை வழங்க நடவடிக்கை!

### நிதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மே 16

நாட்டில் முதலீட்டாளர்களின் வருகையை ஊக்கு விக்கும் வகையில், விசேட வரிச்சலுகைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப் பொன்றின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விசேட வரிச்சலுகை, முதலீடு செய்யப்படும் நிதி, அதன் மூலம் உள்வாங்கப்படும் வேலை வாய்ப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் பிரதேசம் ஆகியவற்றின் மூலம் தீர்மானிக்கப்படும்.

வருடாந்தம் 5 தொடக்கம் 6 பில்லியன் டொலர்கள் வருமானத்தில் ஈட்டக்கூடிய முதலீடுகள் தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் அரசு அவர்களுக்கான சகல வசதிகளையும் வழங்கும். இந்த வரிச்சலுகை தொடர்பான சட்டவரைபு, விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.-என்றார்.

# டெங்கு ஒழிப்புக்கு மக்கள் பங்களிப்பு அவசியம்

கொழும்பு, மே 16

டெங்கு நோய் ஒழிப்புத் திட்டத்துக்கு பொதுமக்களின் பங்களிப்பு அவசியம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை தேசிய கடமை என்று கருதி பொது மக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த வருடத்தில் மட்டும் இதுவரை 43 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த நாடளாவிய ரீதியில் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

டெங்கு நோய்த் தாக்கம் கூடுதலாக காணப்படும் மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்களில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. சுமார் மூவாயிரம் பாடசாலை வளாகங்கள் இதுவரை சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.- என்றுள்ளது.

# போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தம்:

# முடங்கியது தமிழகம்!



சென்னை, மே 16

போக்குவரத்து ஊழியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தம் காரணமாக நேற்று தமிழகம் முடங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஒரு லட்சத்து 43 ஆயிரம் ஊழியர்களுக்கு 13 ஆவது புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்துதல், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 1,700 கோடி ரூபா நிலுவைத் தொகை, மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்க 100 கோடி ரூபா வழங்க வேண்டும் உள்ளிட்ட 7 முக்கிய கோரிக்கைகள் குறித்து நிர்வாகத்துடன் நடந்த 4 கட்ட பேச்சுகளும் தோல்வியில் முடிந்தன.

இதனையடுத்து போக்குவரத்து வேலைநிறுத்தம் தொடங்கியது. அறிவிக்கப்பட்டதற்கு ஒரு நாளைக்கு முன்னதாகவே வேலை நிறுத்தம் ஆரம்பமாகியது.

நேற்றுக் காலை தலைநகர் சென்னையில் குறைந்த அளவிலேயே பேருந்துகள் இயங்கியுள்ளன. வெறும் 30 சதவீத பேருந்துகள் மட்டுமே காணப்பட்டுள்ளன. அதே போல் அரசுப் போக்குவரத்து பணிமனையில் இருந்து புறப்பட வேண்டிய 51 பேருந்துகளிலும் 20 சதவீத பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகின்றன.

குரோம்பேட்டையில் இருந்து இயக்கப்பட வேண்டியவை 159 பேருந்துகள், ஆலந்தூரில் இருந்து இயக்கப்பட வேண்டியவை 136 பேருந்துகள், ஆதம்பாக்கத்திலிருந்து இயக்கப்பட வேண்டியவை 55 பேருந்துகள், செங்கல்பட்டில் இருந்து இயக்கப்பட வேண்டியவை 53 பேருந்துகள். ஆனால், ஒட்டுமொத்தமாகவே 20 சதவீத பேருந்துகள் மட்டுமே இயங்கியுள்ளன.

குரோம்பேட்டை, பல்லாவரம், தாம்பரம் போன்ற பகுதிகளில் மின்சார ரயில் சேவையை மக்கள் பயன்படுத்துகின்றமையால் ஓரளவு பாதிப்பு குறைவு எனக் கூறலாம்.

இருப்பினும் வேளச்சேரி - பள்ளிக்கரணை, கிழக்கு தாம்பரம் - கேம்ப் ரோடு இடையே பேருந்து சேவை முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மக்கள் அருகில் இருக்கும் ரயில் நிலையங்களுக்குக்கூடச் செல்ல முடியாமல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், சென்னை குரோம்பேட்டை பணிமனை அருகே பேருந்து கண்ணாடி உடைக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 431 அரசு பேருந்துகளில் 223 பேருந்துகள் ஓடவில்லை. கிட்டத்தட்ட 50 வீத பேருந்துகள் இயக்கப்படவில்லை.

திருச்சியில் அரசு பேருந்துகள் குறைந்த எண்ணிக்கையிலே இயங்கின. அதனால், தடுப்பு நிலையங்கள் வெறுமையாகக் காட்சியளித்தன.

பேருந்துகள் குறைவாக இயக்கப்பட்டமையால் வெளியூர் செல்வதற்காக ரயில் நிலையத்தில் வழக்கத்தை விட பயணிகள் அதிகமாக இருந்தனர் என்றும் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

(க)

# தமிழக மக்களை ஏமாற்றுகின்றன அ.தி.மு.கவின் இரு அணிகளுமே!

*அந்தக் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா புஷ்பா*



அவனியாபுரம், மே 16

அ.தி.மு.கவின் இரு அணிகளும் மக்களை ஏமாற்றுகின்றனர் என்று அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா புஷ்பா எம்.பி. கூறியுள்ளார்.

மதுரையில் இருந்து சென்னை செல்வதற்காக நேற்று மதியம் சசிகலா புஷ்பா எம்.பி. மதுரை விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

அங்கு அவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.மு.க வின் இரு அணிகளும் மக்களை ஏமாற்றுகிறார்கள். ஓ.பன்னீர் செல்வம் அதிகாரத்தில் இருந்த போது மக்களுக்கு எதுவும் செய்யவில்லை.

தற்போது அதிகாரத்தில் உள்ளவர்களும் எதுவும் செய்வாரில்லை. ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக இருந்தபோது ஜெயலலிதா மரணம் குறித்தோ, தினகரன் குறித்தோ பேசவில்லை.

அ.தி.மு.கவின் இரு அணிகளும் மக்களை கோமாளி ஆக்குகிறார்கள். இது தமிழகத்துக்கு துரதிருஷ்டவசமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அ.தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் சசிகலா புஷ்பாவுக்கு, 24 மணி நேரமும் முழு போலிஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும்' என கடந்த வாரம் டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா புஷ்பா, 'தமிழ்நாட்டில் தனக்கு பாதுகாப்பு இல்லை' என்று டில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இதையடுத்து, சசிகலா புஷ்பா டில்லியில் தங்கியிருக்கும்போது அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க, டில்லிப் பொலிஸுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நான் அரசியலுக்கு வருவது குறித்து ஆண்டவன்தான் முடிவு செய்யவேண்டும்!

*ரசிகர்கள் மத்தியில் ரஜினிகாந்த்*



சென்னை, மே 16

நான் அரசியலுக்கு வருவது குறித்து ஆண்டவன்தான் முடிவு செய்யவேண்டும் என்று ரசிகர்களிடையே நடிகர் ரஜினி உரையாற்றும்போதே தெரிவித்துள்ளார்.

ரஜனி நேற்றுமுதல் 5 நாள்கள் ரசிகர்களை சந்தித்து அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளவிருக்கிறார். என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்று அவர் கலந்து கொண்டு ரசிகர்கள் முன்னிலையில் உரையாற்றியுள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் கடந்த 8 வருடங்களுக்கு பின்னர் தனது ரசிகர்களை சந்தித்து புகைப்படம் எடுக்கப் போகின்றேன் என்று கடந்த மாதமே அறிவித்திருந்தார்.

ஆனால், திடீரென அந்த சந்திப்பு ரத்துச்செய்யப்பட்டது. அதேசமயம், நேற்றுக் காலை 8 மணி முதலே ரஜனி ரசிகர்கள் ராகவேந்திர மண்டபத்துக்குச் செல்லத் தொடங்கினர்.

ரஜனியுடன் போட்டோ எடுப்பதற்கு அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ரசிகர்களைச் சந்திப்பதற்காக ரஜனி காலை 9.50 மணிக்கு ராகவேந்திரா மண்டபத்துக்குச் சென்றுள்ளார்.

அப்போது ரசிகர்களிடையே அவர் உரையாற்றுகையில்–

எனக்கு பலவகையில் வழிகாட்டியாக இருந்தவர் இயக்குநர் எஸ்.பி.முத்துராமன். மது, புகை, போதைப் பழக்கத்திற்கு யாரும் அடிமையாக வேண்டாம். குடும்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கூட்டணிக்கு ஆதரவு தர நேர்ந்தது. அந்தக் கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றது. அன்றுமுதல் தேர்தல் சமயங்களில் சில ஆதாயத்துக்காக ரசிகர்களை பயன்படுத்துவதால் இப்போதெல்லாம் நான் யாருக்கும் ஆதரவு இல்லை எனச் சொல்லக்கூடிய சூழ்நிலைக்குத்தள்ளப்படுகிறேன்.

என் ரசிகர்களை யாரும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக இவ்வாறு சொல்கிறேன்.

ஏதாவது, திரைப்படம் வந்தால் மட்டும் ரஜனி ஏதாவது 'ஸ்டண்ட்' பண்ணுவார் என்று சொல்லுகிறார்கள். ரசிகர் துணையால் அப்படி நான் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

நான் அரசியலுக்கு வருவது குறித்து முடிவெடுக்கும் சக்தி கடவுளுக்குத்தான் உள்ளது. அரசியலுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் பணம் சம்பாதிக்க நினைப்பவர்களை அருகே கூடச்சேர்க்கமாட்டேன் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## ஓ.பி.எஸ். கனவு நிறைவேறாது என்கிறார் செங்கோட்டையன்!



ஆட்சி கவிழும் என்ற ஓ.பன்னீர் செல்வத்தின் கனவு பலிக்காது என்று கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் புன்செய் புளியம்பட்டி அருகே உள்ள செல்லம்பாளையத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒவ்வொருவருக்கும் ஒரு பேராசை உண்டு. அதன் அடிப்படையில் சுயவிளம்பரத்துக்காகக் கருத்துகளைக் கூறுகின்றமை ஏற்புடையது அல்ல. அரசு கவிழும் என்று யார் கூறினாலும் அந்தக் கனவு பலிக்காது; அது நனவாகாது.

தமிழகத்தில் 100 ஆண்டுகள் ஆனாலும் அ.தி.மு.க. ஆட்சிதான் நடைபெறும். இதை அனைவரும் பார்க்கத்தான் போகிறார்கள். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# எங்களுடன் கைகோருங்கள்; உலக நாடுகளுக்கு சீனா அழைப்பு!

பீஜிங், மே 16

அனைத்து நாடுகளுக்கும் நன்மை கிடைக்கும் வகையில் ஒரே கரையோரம் - ஒரே பாதை என்னும் திட்டத்தின் கீழ் அபி விருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு அனைத்து நாடு களும் எம்முடன் கைகோர்த்துக் கொள்ளுங்கள் என்று சீன ஜனா திபதி சீ ஜின் பிங் அழைப்பு விடுத்துள்ளார்.

ஒரே கரையோரம் - ஒரே பாதை என்னும்தொனிப் பொரு ளின்கீழ்சீனதேசிய கருத்தரங்கு மத்திய நிலையத்தில் நடை பெற்ற மாநாட்டை அங்குரார்ப் பணம் செய்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

தலைநகர் பீஜிங் மாநாட்டில்





இந்த மாநாட்டுக்கு 29 நாடு கள், நூறுக்கும் மேற்பட்ட சர்வ தேச அமைப்புகளின் பிரதிநிதி கள் பல நாடு களின் தலைவர் கள் எனப் பலர் கலந்து கொண் டனர்.

பாகிஸ்தான் உட்பட 29 நாடுகளின் தலைவர்கள் பங் கேற்கும் இந்த 2 நாள் மாநாடு சீன தலைநகர் பீஜிங்கில் ஆரம் பமாகியது. இந்த மாநாட்டை இந்தியா புறக்கணித்தது.

இந்தியாவுடன் மறைமுகப் போரை தினித்துவரும் பாகிஸ் தானுடன் சீனா நட்புறவு கொண் டுள்ளது. அந்த நாட்டுடனான பொருளாதார, வர்த்தக தொடர்பை வலுப்படுத்த சீனா விரும்புகிறது.

இதற்கு வசதியாக ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடு களை இணைத்து 'சில்க் ரோடு' என்ற பெயரில் துறை முகம், நெடுஞ்சாலை, ரயில் தடங் கள் ஆகியவற்றை விஸ்தரித்து புதிய பொருளாதாரத் தடத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற உள்ளது.

**இந்தியா புறக்கணிப்பு**

பல லட்சம் கோடி ரூபா மதிப் பில் உருவாக உள்ள இந்தத் திட்டத்தின் பாதை, இந்தியா வுக்குச் சொந்தமான ஆக்கிர மிப்பு காஷ்மீர் வழியாக அமை யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இதேபோன்று, இந்த திட் டத்தால் உலகளவில் சீனாவின் பொருளாதார, வணிக ஆதிக்கம் மிகுந்து விடும் என்பதால் அமெ ரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடு களும் இதை விரும்பவில்லை.

இந்த நிலையில் இந்தத் திட் டம் தொடர்பாக சீனா, பீஜிங் கில் இந்த 2 நாள் மாநாட்டை கூட்டி உள்ளது.

இந்தத் திட்டம், இந்தியாவின் இறையாண்மைக்கும், பிராந் திய ஒருமைப்பாட்டுக்கும் எதி ரான திட்டம் என்று கூறி, எதிர்ப் புத் தெரிவித்து இந்த மாநாட் டைத் தான் புறக்கணிக்கிறது என்று இந்தியா அறிவித்தது.

இருப்பினும், இந்த 2 நாள் மாநாடு நேற்றுமுன்தினம் திட்டமிட்டபடி பீஜிங்கில் ஆரம்பமாகியது. ஏற்கனவே அறிவித்தபடி, இந்தியா இந்த மாநாட்டை புறக்கணித்து விட்டது.

இந்த மாநாட்டல் சீன ஜனாதி பதி மேலும் உரையாற்றியவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் பாதுகாப்புச் சபையால் முன்வைக்கப்பட்ட முக்கிய யோசனைகளின் பிரகாரம் ஒரே கரையோரம் - ஒரே பாதை என்னும் திட்டம் மிகவும் முக் கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான நிதி உதவிகளை சீனா வழங்கும். இதன்பிரகாரம் பட்டுப்பாதை நிதியத்திற்கு 100 பில்லியன் யுவானை ஒதுக்கியுள்ளோம்.

அத்துடன், ஒரே கரையோரம் - ஒரே பாதை என்னும் திட் டத்தின் கீழ் வெளிநாடுகளில் முதலீடுகளைச் சீன வர்த்தகர் களுக்கு 300 பில்லியன் யுவானை ஒதுக்கீடு செய்துள் ளோம்.

மேலும், உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி, அணு சக்தி வள உற்பத்தி மற்றும் நிதி ஒத்துழைப்புகளுக்கு வலு வூட்டுவதற்கு சீன தேசிய அபி விருத்தி வங்கி மற்றும் ஏற்று மதி - இறக்குமதி வங்கிகளுக்கு நிதி ஒதுக்கியுள்ளோம் .-என் றும் அவர் தெரிவித்துள் ளார். (க)

## அமெரிக்க கூட்டுப்படைகளின் தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பினர் 20 பேர் உயிரிழப்பு!



பக்தாத், மே 16

ஐ.எஸ். அமைப்பினரின் சொர்க்கம் எனக் கருதப்படும் அன்னா நகரத்தில் அமெரிக்க கூட்டுப்படைகள் மேற்கொண்ட வான் தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பினர் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். அமைப்பினர் மீது உள்நாட்டுப் படைகளுடன், அமெரிக்க கூட்டுப்படை களும் இணைந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

ஆனாலும், தொடர்ந்து பாதுகாப்புப் படை களைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடத்தி வருகிற ஐ.எஸ். அமைப்பினரைக் கட்டுப்படுத்த முடியாமல் இந்தப் படைகள் திணறி வருகின்றன.

இந்த நிலையில் அன்பார் மாகா ணத்தில் ஐ.எஸ். அமைப்பினரின் சொர்க்கம் எனக் கருதப்படக்கூடிய அன்னா நகரத்தில் அமெரிக்க கூட் டுப்படைகள் அதிரடியாகக் குண்டு மழை பொழிந்தன. இந்த வான் தாக்கு தலில் 20 ஐ.எஸ். அமைப்பினர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக ஈராக்கின் அல் ஜசிரா செயல்பாடுகள் பிரிவின் தலை வர் காசிம் முகமதி நேற்று முன்தினம் கூறுகையில்-

ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் சொர்க்க மாகக் கருதப்படக் கூடிய அன்னா நகரத்தில் கூட்டுப்படைகள் நடத்திய குண்டுவீச்சில் 20 பேர் கொல்லப்பட் டனர்.

அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் மனிதக் கேடயங்களாக நிறுத்தப்பட் டுள்ளனர். அதற்கு மத்தியில் இந்தக் குண்டுவீச்சு நடந்துள்ளது என்று குறிப் பிட்டுள்ளார். (க)

## அதிகம் பேசப்படுபவரானார் கனேடிய பிரதமரின் மகன்!



கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடேவ்வின் மகன் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்படும் ஒருவராக மாறியுள் ளார்.

கனேடிய பிரதமர் கடந்த வியாழக்கிழமை தனது அலு வலகத்திற்கு அவரது மூன்றா வது மகனையும் அழைத்துச் சென்றுள்ளார்.

பிரதமரின் மகன் தனது தந் தையுடன் கூட்டங்கள் மற்றும் ஊடகவியலாளர் சந்திப்புகளில் கலந்து கொண்டார். இந்தக் காட்சிகள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அத்துடன், பிரதமரான தனது தந்தையுடன் மகன் கண்ணா மூச்சு விளையாடியமையினால் அவர் மிகவும் பரபரப்பாகச் செயற்பட்டுள்ளார்.

இதனை பிரதமர் தனது பேஸ் புக் பக்கத்தில் புகைப்படத் து டன் பதிவிட்டுள்ளார். அது தற் போது நல்ல வரவேற்பு பெற்றுள் ளது.

இதனையடுத்து, கனேடியப் பிரதமரின் மகன் தற்போது உலகம் முழுவதும் பல லட்சம் மக்களின் அன்பைப் பெற்றுள் ளார். அந்தப் புகைப்படங்களுக்கு பல லட்சம் பேர் விருப்பங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (க)

## 8 தடவை எவரெஸ்ட் ஏறி சாதனை படைத்த 2 மாத கர்ப்பிணிப் பெண்!

பாக்தாத், மே 16

மலை ஏறுவதில் மிகுந்த ஆர்வம் கொண்ட வீராங் கனை லாக்பா ஷெர்பா 8 முறை மலை ஏறிச் சாதனை படைத்துள்ளார்.

மலை ஏறுவதில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை படைக்க வேண் டும் என விரும்பி கடந்த 2000 ஆம் ஆண்டில் அதனை நிறைவேற்றினார்.

3 குழந்தைகளுக்குத் தாயான இவரது வயது 44, தனது முதல் குழந்தை பிறந்த 8 ஆவது மாதத்தில் முதன் முதலாக மலை ஏறினார்.

அதன் பின்னர் அவரது மலை ஏறும் ஆர்வம் அதி கரித்தது, எனவே தொடர்ந்து எவரெஸ்ட் சிகரம் ஏறினார்.

2-வது முறை எவரெஸ்ட் சிகரம் ஏறும் போது அவர் 2 மாத கர்ப்பிணி ஆக இருந்தார், அதன் பிறகு 2 ஆவது குழந்தை பிறந்தது.

சமீபத்தில், 8 ஆவது தடவையாக எவரெஸ்ட் சிகரம் ஏறிப் புதிய சாதனை படைத்துள்ளார், இதன் மூலம் அவரது சாதனையை அவரே முறியடித்துள் ளார். (க)

# ரிக்கி பொன்டிங்கின் கனவு ஐ.பி.எல் அணியில்

# லசித் மலிங்க!

கொழும்பு, மே 16

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும் மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னாள் தலைமை பயிற்றுவிப்பாளருமான ரிக்கி பொன்டிங் இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் கடந்த பத்து பருவகாலப் போட்டிகளின் அடிப்படையில், அதில் திறமை காட்டிய வீரர்களைக் கொண்டு எப்போதும் சிறப்பாக செயற்படக்கூடிய ஒரு கனவு அணியைத் தெரிவு செய்துள்ளார்.

இந்த பருவகாலத்துக்கான இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் போட்டிகள் நிறைவை எட்டிவருகின்ற இத்தருணத்தில் மிக்க அவதானத்துடன் வீரர்களின் செயற்றிறன் பொன்டிங்கால் ஆராயப்பட்டு, பதினொரு வீரர்கள் அடங்கிய இந்த அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் விதிமுறைகளுக்கு அமைவாக அத் தொடரில் விளையாடும் அணியொன்று நான்கு வெளிநாட்டு வீரர்களை மாத்திரமே கொண்டிருக்க வேண்டும்.

பொன்டிங் தேர்வு செய்திருக்கும் அணியில் இந்த நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், கடந்த கால தொடர்களில் அற்புதமாகச் செயற்பட்டிருந்த மூன்று மேலதிக வெளிநாட்டு வீரர்களை அணியில் உள்ளடக்க முடியாத சிறப்பு வீரர்கள் என்னும் பட்டியலில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் சேர்த்துள்ளார்.

தனது கனவு அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெயிலையும், ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோர்னரையும் பொன்டிங் பெயரிட்டுள்ளார். இரு வீரர்களும் ஐ.பி.எல் போட்டிகளில் 40 ஓட்டங்கள் என்ற சராசரி ஓட்ட எண்ணிக்கையைக் கொண்டிருக்கின்றமை எந்தப் பந்து வீச்சாளராகக் காணப்படினும் சமாளித்து விரைவாக ஓட்டம் சேர்க்க கூடிய வீரர்களாகக் காணப்படுவதுமே பொன்டிங்கின் இந்த முடிவிற்குக் காரணமாக அமைகின்றது.




றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவரான விராட் கோஹ்லிக்கு அணியில் மூன்றாம் இலக்கத் துடுப்பாட்ட வீரராக ஆடத் தனது கனவு அணியில் பொன்டிங் வாய்ப்பைத் தந்திருக்கின்றார். கோஹ்லி எதிரணி வைக்கும் சவாலான வெற்றி இலக்கை எட்டிப்பிடிப்பதில் வல்லவராகக் காணப்படுகின்றார் என்கிற காரணத்தினாலேயே இந்த வாய்ப்பை வழங்குகிறேன் என்றும் பொன்டிங் தெரிவித்துள்ளார்.

தான் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியிருந்த மும்பை இந்தியன்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ரோஹித் சர்மாவுக்கும், சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் குஜராத் லயன்ஸ் அணிகளுக்காக ஆடியிருந்த சுரேஷ் ரெய்னா ஆகியோர் கனவு அணியில் முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இலக்க வீரர்களாகக் களமிறங்க வேண்டும் என்பது பொன்டிங்கின் அவாவாக காணப்படுகின்றது.

இந்த இரண்டு வீரர்களும் மத்திய வரிசையைப் பலப்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள் என்கிற காரணத்தாலேயே அவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தனது அணிக்கு தலைவர் யார் எனத்தெரிவு செய்வதில் தீர்க்கமான முறையில் செயற்பட்டு முடிவெடுத்த பொன்டிங், அதற்கு முழுத் தகுதியானவர் இந்திய அணியின் முன்னாள் தலைவரான மஹேந்திர சிங் டோனி என்று கூறியுள்ளார்.

அவர் துடுப்பாட களமிறங்கும் சந்தர்ப்பங்களில் அவர் சார்பான அணி வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதன் காரணமாகவே அணித்தலைவர் பொறுப்பு வழங்கத் தீர்மானித்தேன் என்றும் பொன்டிங் கூறியிருந்தார். அத்தோடு சிறந்த களத்தடுப்பு காரணமாக அணியின் விக்கெட் காப்பாளர் பொறுப்பும் டோனிக்கே சேர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கனவு அணியின் பந்து வீச்சு துறையினை முன்னெடுப்பதற்காக மூன்று வேகப்பந்து வீச்சாளர்களும், இரண்டு சுழல் பந்து வீச்சாளர்களும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதில் வேகப்பந்து வீச்சாளர்களில் வெளிநாட்டு வீரர்களாகக் காணப்படும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டுவேய்ன் பிராவோ மற்றும் இலங்கை அணியின் நட்சத்திர பந்து வீச்சாளரான லசித் மலிங்க ஆகியோர் அணியில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

இதில் ப்ராவோ சில நேரங்களில் தனது துடுப்பாட்ட மட்டை மூலம் அணியின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்யக்கூடியவராகக் காணப்படுவதோடு, பந்தின் வேகங்களைச் சடுதியாக மாற்றி எதிரணிக்கு பல முறை சவால் விட்டு செயற்பட்டு இருப்பதே, ஏனைய பல வீரர்கள் இருந்தும் ப்ராவோவை பொன்டிங் தெரிவுசெய்யக் காரணமாக அமைகின்றது.

இந்தியன் பிரிமியர் லீக் ஆரம்பித்த காலத்தில் இருந்து மும்பை அணிக்காக மாத்திரம் விளையாடி வரும் மலிங்க, இருபதுக்கு 20 பந்து வீச்சாளர்களில் அதி சிறந்த வீரர் என்று புகழாரத்தைப் பொன்டிங் சூட்டியிருக்கிறார்.

மேலும், முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை துல்லியமான யோர்க்கர் மூலம் வீழ்த்தும் ஆற்றல் கொண்டிருக்கும் மலிங்க 'பவர் ப்ளே' ஓவர்களிலும் எதிரணியை கட்டுப்படுத்தும் வகையில் செயற்படக்கூடியவர் என பொன்டிங்மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான காரணங்களாலேயே மலிங்க, பொன்டிங்கின் கனவு அணியில் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

மூன்றாவது வேகப்பந்து வீச்சாளராக இந்திய பிரிமியர் லீக் தொடரில் இது வரையில் ஐந்து அணிகள் வரையில் பரிமாற்றப்பட்டு விளையாடியிருக்கும் ஆஷிஸ் நெஹ்ரா தெரிவு செய்யப்பட்டிருந்தார். பல இக்கட்டான நிலைகளில் சாமர்த்தியமான முறையில் செயற்பட்ட காரணத்திற்காகவே பொன்டிங்கினால் இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். பருவகாலத்தில் அதிக விக்கெட்டுகளை சாய்த்த வீரர்களில் ஒருவராகக் காணப்படும் அமித் மிஷ்ராவிற்கும் சில வேளைகளில் துடுப்பாட்ட வீரராக அசத்தும் அனுபவமிக்க ஹர்பஜன் சிங்கிற்கும் அணியின் சுழல் பந்துவீச்சு துறையை மேம்படுத்த பொன்டிங்கால் கனவு அணியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பொன்டிங்கின் கனவு அணியில் சேர்க்கப்படாவிட்டாலும், இதுவரை நடந்த ஐ.பி.எல். போட்டிகளில் அபார ஆட்டத்தை வெளிக்காட்டியிருந்த வெளிநாட்டு வீரர்களான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வீரர் சுனீல் நரைன், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் ஏ.பி.டி வில்லியர்ஸ் மற்றும் குஜராத் லயன்ஸ் அணியில் விளையாடி வரும் ப்ரென்டன் மெக்கலம் ஆகியோரும் பொன்டிங்கால் சிறப்பு வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

பொன்டிங்கின் கனவு ஐ.பி.எல் அணியில் இடம் பெற்றுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

கிறிஸ் கெயல், டேவிட் வோர்னர், விராட் கோஹ்லி, ரோஹித் சர்மா, சுரேஷ் ரெய்னா, மஹேந்திர சிங் டோனி, டுவேய்ன் ப்ராவோ, ஹர்பஜன் சிங், அமித் மிஷ்ரா, லசித் மலிங்க, ஆஷிஸ் நெஹ்ரா.

அணியில் உள்ளடக்க முடியாத வெளிநாட்டு வீரர்கள்: சுனீல் நரைன், ஏ.பி.டி வில்லியர்ஸ், ப்ரெடன்டன் மெக்கலம்.

# மட்றிட் டென்னிஸ் மகளிர் சம்பியன் பட்டம் வென்றார் சிமோனா ஹாலெப்!

பிரான்ஸ் வீராங்கனை கிறிஸ்டினா மிலாடெனொவிக்கிற்கு எதிராக நடைபெற்ற இறுதிப் போட்டியில் 2 : 1 என்ற செட்கள் அடிப்படையில் வெற்றியீட்டிய ருமேனிய வீராங்கனை சிமோனா ஹாலெப், மட்றிட் பகிரங்க டென்னிஸ் மகளிர் ஒற்றையர் சம்பியனானார்.

கடந்த நான்கு வருடங்களில் மூன்றாவது மட்றிட் இறுதிப் போட்டியில் விளையாடிய ஹாலெப் 7:5, 6:7, 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

முதல் இரண்டு செட்களிலும் மிலாடெனோவிக்கிடம் கடும் சவால்களை எதிர்கொண்ட ஹாலெப் ஒரு சந்தர்ப்பத்தில் பந்து காவும் சிறுவனை நோக்கி டென்னிஸ் துடுப்பை எட்டி உதைத்தமையால் விதிகளை மீறியமைக்காக எச்சரிக்கைக்குள்ளானார்.

இதேவேளை, மட்றிட் பகிரங்க டென்னிஸ் போட்டிக்கான பரிசளிப்பு வைபவத்தில் ருமேனிய சம்மேளனக் கிண்ண அணித்தலைவர் இல் நட்டாஸே பிரசன்னமானை அழைத்தமை பொறுப்பற்ற செயல் எனவும் ஏற்புடையதல்லவெனவும் மகளிர் டென்னிஸ் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

பிரித்தானியாவுடனான சம்மேளனக் கிண்ணப் போட்டியின்போது நட்டாஸே, வீராங்கனை ஒருவரைத் தூஷித்தமை தொடர்பாக சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் விசாரணை நடத்திக் கொண்டிருக்கும் வேளையில் அவரை பரிசளிப்புக்கு அழைத்தமை பொருத்தமற்றது என மகளிர் டென்னிஸ் சங்கத் தலைவர் ஸ்டீவ் சைமன் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப்பை பந்தாடியது புனே சூப்பர்ஜெயன்ட்!



புனே, மே 16

ஐ.பி.எல். அரங்கில் நேற்று முன்தினம் புனேயில் இடம்பெற்ற முதல் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் மார்ட்டின் கப்தில், சகா ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம் இறங்கினர்.

போட்டி தொடங்கியதுமே பஞ்சாப் அணிக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. உனத் கட் வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே கப்தில், திவாரியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து அவ்வணியின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்துச் சரிய ஆரம்பித்தன. ஷோன் மார்ஷ் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார்.

மோர்கன் 4 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆக, டெவாட்டியா 4 ஓட்டங்களிலும், மெக்ஸ்வெல் ஓட்டங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

சகா 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அக்சார் பட்டேல் 22 ஓட்டங்களும், ஸ்வாப்னில் சிங் 10 ஓட்டங்களும் அதிகபட்சமாக பெற்றுக்கொள்ள, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 15.5 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 73 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

புனே அணியில் ஷர்துல் தாகூர் 3 விக்கெட்டுக்களையும், உனத்கட், ஆடம் சம்பா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 74 என்ற இலகுவான வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களம் புகுந்த ரைசிங் புனே சூப்பர்ஜெயன்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான திரிபாதி 20 பந்துகளில் 28 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரகானேயுடன் ஜோடி சேர்ந்த ஸ்மித் மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டார். இதனால் புனே அணி 12 ஓவர்களில் 1 விக்கெட் இழப்பிற்கு 78 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ரகானே 34 பந்துகளில் 34 ஓட்டங்களுடனும், ஸ்மித் 18 பந்துகளில் 15 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழப்பின்றி களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 14 போட்டிகளில் 9 இல் வெற்றி பெற்ற புனே அணி பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

## கிண்ணத்தை வென்றது பாக்.அணி!




டோமினிகா, மே 16

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 2-1 எனக் கைப்பற்றி, கரீபிய மண்ணில் முதன்முறையாக கோப்பை வென்றுள்ளது.

மூன்றாவது டெஸ்டில் 6 பந்துகள் மீதமிருந்த நிலையில் பாகிஸ்தான் அணி 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்ற பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது. மூன்றாவது டெஸ்ட் டொமினிகாவில் இடம்பெற்றது.

முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 376, மேற்கிந்தியத் தீவுகள் 247 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்கு 174 ஓட்டங்கள் எடுத்து, 'டிக்ளேர்' செய்தது.

பின், 304 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸை துவக்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 4 ஆம் நாள் முடிவில் ஒரு விக்கெட்டுக்கு 4 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது. பொறுப்பாக ஆடிய ராஸ்டன் சேஸ், சதமடித்தார். ஐந்தாம் நாள் ஆட்டத்தின் கடைசி 2 ஓவரில், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிக்கு ஒரு விக்கெட் மட்டும் கைவசமிருக்க, 102 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆறு பந்துகள் மீதமிருந்த நிலையில், 2 ஆவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 202 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வி அடைந்தது.

இதன்மூலம் பாகிஸ்தான் அணி 2-1 என முதன்முறையாக மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

## நெய்மர் 'ஹட்ரிக்': பார்சிலோனா வெற்றி!



லாஸ் பால்மாஸ், மே 16

லா லிகா உதைபந்து லீக் போட்டியில் நெய்மர் 'ஹட்ரிக்' கோல் அடித்து கைகொடுக்க, பார்சிலோனா அணி 4-1 என லாஸ் பால்மாஸ் அணியை வீழ்த்தியது.

ஸ்பெயினில் உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் 'லா லிகா' உதைபந்து தொடர் நடக்கிறது. இதில் 'நடப்பு சாம்பியன்' பார்சிலோனா, ரியல் மாட்ரிட் உள்ளிட்ட 20 அணிகள் பங்கேற்கின்றன. லாஸ் பால்மாஸ் நகரில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, லாஸ் பால்மாஸ் அணிகள் மோதின.

துவக்கத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு நெய்மர் (25 ஆவது நிமிடம்), லூயிஸ் சாரஸ் (27 ஆவது) தலா ஒரு கோல் அடித்துக் கைகொடுத்தனர். முதல் பாதி முடிவில் பார்சிலோனா 2-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பால்மாஸ் அணிக்கு 63 ஆவது நிமிடத்தில் பெட்ரோ பிகாஸ், ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய நெய்மர், 67, 71 ஆவது நிமிடத்தில் தலா ஒரு கோலடித்து, 'ஹாட்ரிக்' சாதனை படைத்தார்.

ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**ரொனால்டோ அபாரம்**

மாட்ரிட் நகரில் நடந்த மற்றொரு போட்டியில் ரியல் மாட்ரிட், செவில்லா அணிகள் மோதின. அபாரமாக ஆடிய ரொனால்டோ 2 கோல்கள் அடித்து கைகொடுக்க, ரியல் மாட்ரிட் அணி 4-1 என வெற்றி பெற்றது.

## பெங்களூர் அணி அபார வெற்றி!



டில்லி, மே 16

நேற்று முன்தினம் டில்லியில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும், டெல்லி டேர்டேவில்ஸ் அணியும் மோதின.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய அவ்வணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெயில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ஐந்தாவது ஓவரில் முதல் விக்கெட்டை இழந்த நிலையில் கோஹ்லி மற்றும் கிறிஸ் கெயில் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். பெங்களூர் அணி 12 ஓவர்கள் முடிவில் 90 ஓட்டங்களை குவித்தது.

அணி சார்பில் கிறிஸ் கெயில் அதிகபட்சமாக 48 ஓட்டங்களையும், விராட் கோஹ்லி 58 ஓட்டங்களையும் குவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து 162 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி டேர்டேவில்ஸ் அணியின் சஞ்சு சம்சன் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் இரண்டாவது பந்திலேயே அரங்கு திரும்பினார்.

இவருடன் களமிறங்கிய மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கே.கே. நாயர் 26 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்க, எஸ்.எஸ். ஐயர் 32 ஓட்டங்களையும், ஆர்.ஆர். பண்ட் 45 ஓட்டங்களையும் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தனர். இவர்களை தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் மொகமட் சமி ஸ்டம்பிங் முறையில் தனது விக்கெட்டை இழந்தார். பின் கடைசிப் பந்தில் நதீம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க, 20 ஓவர்கள் முடிவில் டெல்லி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 151 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன் காரணமாக பெங்களூர் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## இனவாதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலனறுவை கதுருவெல முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்–

ஒரேநாட்டுமக்களாக அனைவரும் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும். நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக நிதி ஒதுக்கீடுசெய்யும்போது இனம், மதம் அல்லது கட்சிக்குரியது என்பது பார்க்கப்படுவதில்லை. தேவை மட்டுமே முக்கியமாகப் பார்க்கப்படுகின்றது.

நாட்டின் அபிவிருத்திக்காக அறிவும், பண்பும் நிறைந்த மக்களை உருவாக்குவதற்காக கல்வி வளர்ச்சியடைய வேண்டும். கல்வித்துறையில் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்திக்காக எந்தவொரு பின்னடைவுமின்றி தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது.– என்றார். (மு)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கனவேகவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டவற்றை முன்னெடுப்பதிலும் தீர்க்கமான முன்னேற்றத்தைக் காட்ட வேண்டிய நிலையில் இலங்கை இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஐ.நாவில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளிலும் மனித உரிமைகள் பேணப்படும் போக்குக் குறித்து நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 'பூகோளக் காலக்கிரம மீளாய்வு' செய்வது வழமை.

இலங்கை குறித்துக் கடைசியாக 2013 நவம்பரில் இந்த ஆய்வு கவுன்ஸிலில் இடம்பெற்றது.

2017 நவம்பரில் கவுன்ஸில் அமர்வின்போது மனித உரிமைகள் நிலைவர மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் அடங்கியுள்ளது. (உ)

## ஜெனரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான ஆரம்பகட்ட விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் நடைபெற்று வருகின்றன.

சரணடைந்தவர்கள் தொடர்பாக அப்போது அங்கு கடமையாற்றிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கே தெரியுமென கூறப்பட்டிருந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக வாதாடும் சட்டத்தரணி, இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை சாட்சியமாக இணைந்துகொள்ளவும் நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைக்கவும் கேட்டிருந்தார். அதனையே நேற்று முல்லைத்தீவு நீதிபதி நிராகரித்துள்ளார்.

இதனிடையே கஜபாகு காலாட் படைப் பிரிவின் கட்டளை அதிகாரியாக கடந்த மாதம் சவேந்திர சில்வா பதவியுயர்வு பெற்றிருந்தார் என்பது தெரிந்ததே.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக அஜராகிய சட்டத்தரணி கருத்துக் கூறுகையில் –

நிலுவையில் உள்ள வேறு வழக்கின் மூலம் அவரை மன்றுக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றோம். -- என்றார்.

இந்த வழக்கு ஜுன் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

## விக்கிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிலாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனை நிறுத்துவதற்கு, கூட்டமைப்பு ஆலோசித்து வருவதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டி, வடமாகாண முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்ட சி.வீ.விக்னேஸ்வரன், கட்சியின் கொள்கையை பின்பற்றாது, தனிப்பட்ட ரீதியில் செயற்படுகிறார் என கட்சிக்குள் இருந்து குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே, இவ்வாறான தகவல் கசிந்துள்ளது என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் தற்போதைய பதவிக் காலம் அடுத்த வருடம் செப்ரெம்பருடன் முடிவடைகின்றது என்பது தெரிந்ததே. (உ)

## வடமத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
17 பேர் முதலமைச்சருக்கு எதிராக ஆளுநரிடம் மகஜர் அளிக்க முற்பட்டுள்ளனர்.

முதலமைச்சராக இருந்த எஸ்.எம்.ரஞ்சித்திற்கே மீளவும் அப்பதவியை வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, இந்த மனுவை ஆளுநர் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

உயர்பீடத்தில் இருந்து வந்த உத்தரவு காரணமாகவே தான் இதனைப் பொறுப்பேற்கவில்லை என வட மத்திய மாகாண ஆளுநர் பி.பி.திஸாநாயக்கா தெரியப்படுத்தியுள்ளார் என அம்மாகாண சபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

## அரசாங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் வீடியோ ஆதாரங்களைத் தம்வசம் வைத்துள்ளார்கள். அதனடிப் படையில் அவ்வாதாரங்களில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அருகில் உள்ள இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களை அடையாளம் கண்டு, அவர்களிடம் விசாரணை செய்தால், காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, யுத்தத்தை தான்தான் முன்னின்று நடத்தி, வெற்றியைப் பெற்றுக் கொடுத்தேன் என்று கூறுகின்ற சரத் பொன்சேகா, தற்போது அமைச்சராக நாடாளுமன்றத்தில் இருக்கின்றார். அவரிடமே இந்த ஆதாரங்களைக் காட்டினால், அவர் இலகுவாக இராணுவ அதிகாரிகள் அநேகரை அடையாளம் காண உதவுவார்.

அதனடிப்படையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலையைஅறிந்து, அவர்களின் உறவுகளுக்கு ஒரு முடிவை அறிவிக்கலாம். இந்தப் பொறுப்பை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையில் எடுத்து, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளின் போராட்டம், எந்தவிதமான தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாமல் 100ஆவது நாளை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றது. இந்த விடயத்தில், அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், பாராமுகமாகவே நடந்து கொள்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், பதவிகளைத் தூக்கி எறிவோம் என்றோ அல்லது அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிப்போம் எனக் கூறியோ, மிரட்டிச் சாதிக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணைக்கு ஏற்றுக் கொண்டது.

அந்த முறையீடு தொடர்பான உயர்நீதிமன்ற விசாரணை முடிவடையும் வரை கீதா குமாரசிங்க எம்.பி. பதவியில் தொடரவும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை இடைநிறுத்தி வைக்கவும் வழிசெய்யும் விதத்திலான இடைக்கால உத்தரவையும் உயர்நீதிமன்ற ஆயம் நேற்று 2–1 ஆகப் பிரிந்து வழங்கியது.

நீதியரசர்கள் இவா வனசுந்தர, உபாலி அபேரத்தின, அனில் குணரட்ண ஆகிய மூவரில் இருவர் இடைக்காலத் தடை உத்தரவுக்கு அனுமதி வழங்கியமையால் இந்த மேன்முறையீட்டின் மீதான விசாரணை முடிந்து உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கும் வரையில் கீதா குமாரசிங்க தனது எம்.பி. பதவியில் தொடர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்பினரும் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் பில் ஜோன்ஸன் நேற்றுக் கொழும்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷா டி சில்வாவைச் சந்தித்தார்.

பில் ஜோன்ஸன் – தூதுவர் அதுல்கொசப்குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனையும் சந்தித்தனர் என்பது தெரிந்ததே. (உ)

## தமிழின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தோருக்கான அஞ்சலி நிகழ்வாக நேற்றைய நினைவேந்தல் நடத்தப்பட்டது.

குமுதினிப் படகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக நெடுந்தீவில் கட்டப்பட்டுள்ள தூபிக்கு முன்பாக மேற்படி நினைவேந்தல் நடைபெற்றது.

கடந்த 1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு நெடுந்தீவின் மாவிலி துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட குமுதினி படகில் சென்ற பொதுமக்களை நடுக்கடலில் வழிமறித்த கடற்படையினர் அதில் பயணித்த அப்பாவிப் பொதுமக்களை ஈவிரக்கமின்றி கூரிய ஆயுதங்களால் குத்தியும், வெட்டியும் படுகொலை செய்தனர்.

கடற்படையின் வெறியாட்டத்தில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அந்தப் படுகொலையின் 32 ஆவது நினைவுதினம் நேற்று நெடுந்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தலைமையில் இடம்பெற்ற நேற்றைய நினைவேந்தல் நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, விந்தன் கனகரட்ணம், பா.கஜதீபன் ஆகியோரும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (மு)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இலவசப் போக்குவரத்து ஒழுங்கு

### வடக்கு மாகாண சபை அறிவிப்பு

முல்லைத்தீவு, மே 16

தமிழினப் படுகொலை நிகழ்வான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலவச போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கீழ்க்குறிப்பிட்ட அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு சார்பாக வடமாகாண சபை உறுப்பினர் ஆ.சி.துரைராசா ரவிகரன் அறிவித்துள்ளார்.

**முல்லைத்தீவு மாவட்டம்**

01. துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக காலை 7.30.

02. மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக காலை 7.30.

03. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முன்பாக காலை 8மணி. தொடர்பு கொள்ள வேண்டியது :- நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, அலைபேசி இலக்கம்:- 077 418 8975.

04. வள்ளுவர்புரம் (விசுவமடு) பாடசாலை முன்பாக காலை 8மணி. தொடர்புகொள்ள வேண்டியது:- வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், அலைபேசி இலக்கம்:- 077 0284481.

05. தொட்டியடிச்சந்தி (விசுவமடு) முன்பாக காலை 7.30மணி.

தொடர்பு கொள்ள வேண்டியது: - தனபாலசிங்கம் சிவச்சந்திரமூர்த்தி, அலைபேசி இலக்கம்:- 077 528 5403.

06. விசுவமடுச் சந்தியிலிருந்து காலை 7.30 மணி.

07. கைவேலி சந்தியிலிருந்து காலை 7.30 மணி. தொடர்புகொள்ள வேண்டியது:- தம்பையா யோகேஸ்வரன் அலைபேசி இலக்கம்:- 0772206776.

இவற்றை விட முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்திற்கு முன்பாக காலை 8 மணி, 8.30 மணி மற்றும் 9 மணி ஆகிய நேரங்களிலும் இலவச போக்குவரத்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**வவுனியா மாவட்டம்**

01. வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக காலை 7 மணி (இரண்டு பேருந்துகள்)

தொடர்பு கொள்ள வேண்டியது:- வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், அலைபேசி இலக்கம்:- 0710732726.

**கிளிநொச்சி மாவட்டம்**

01. கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து காலை 7.30 மணி (இரண்டு பேருந்துகள்)

தொடர்பு கொள்ள வேண்டியது:- வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராசா, அலைபேசி இலக்கம்:- 0773273629.

**மன்னார் மாவட்டம்**

01. மன்னார் பேருந்து நிலையம் முன்பாக காலை 6மணி (இரண்டு பேருந்துகள்) தொடர்பு கொள்ள வேண்டியது:- வடக்கு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், அலைபேசி இலக்கம்:- 0772083020.

**யாழ். மாவட்டம்**

**வடமராட்சி**

01. தொண்டைமானாறு சந்தி காலை 6.30மணி. தொடர்புகொள்ள வேண்டியது:- வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் அலைபேசி இலக்கம்:-0777729020

**தென்மராட்சி**

02. கைதடிச்சந்தியில் இருந்து காலை 7.00 மணி. தொடர்புகொள்ள வேண்டியது:- கந்தையா அருந்தவபாலன், அலைபேசி இலக்கம்:- 0776186554.

**வலிகாமம்**

03. காரைநகர் சந்தியிலிருந்து காலை 6.30மணி தொடர்புகொள்ள வேண்டியது:- வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், அலைபேசி இலக்கம்:- 0777447288.

**யாழ்ப்பாணம்**

04. யாழ் பிரதான பேருந்து நிலையம் முன்பாக காலை 6.30மணி.

தொடர்பு கொள்ள வேண்டியது:- வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, அலைபேசி இலக்கம்:-0776450292. (மு)

## சவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரேத ஊர்வலத்தில் வெடித்த பட்டாசுகளால் குழம்பிய குளவிக் கூட்டம், ஊர்வலத்தில் வந்தோரைக் கலைத்துக் கலைத்துக் கொட்டியதாம்.

பிரேதத்தைத் தூக்கி வந்தவர்கள் அதனைப் போட்டுவிட்டு அருகில் இருந்த பிரேதக் குழிக்குள் பாய்ந்து தப்ப முயன்றனராம். அப்படிப் பாய்ந்தவர்கள் மீதே மோசமான தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது.

79 வயது தோட்டத் தொழிலாளி ஒருவரின் சாவு வீட்டிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்கின்றது.

ஒரு குழந்தை உட்பட மோசமாகப் பாதிக்கப்பட்ட எண்மர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வீதியில் போடப்பட்ட பிரேதம் பல மணி நேரம் கழிந்துத் தான் பின்னர் மீட்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டனவாம். (உ)

## குழப்பமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சபைகளில் அங்கம் வகிக்கும் ஐ.தே.கட்சி உறுப்பினர்களும் அதிகாரப் போட்டியில் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனராம்.

மத்திய மாகாண சபையில் 78 உறுப்பினர்களில் 56 பேர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தோர். எஞ்சிய 22 பேர் ஐ.தே.கவினர்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆளும் தரப்பு இரண்டாகப் பிரிந்து நிற்பதால் முதலமைச்சருக்கு ஆதரவான மைத்திரி தரப்பு பெரும்பான்மைப் பலத்தை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதிகாரப் போட்டியில் புகுந்து விளையாட விரும்பும் ஐ.தே.க. உறுப்பினர்கள் 11 பேர் அதற்கு வசதியாகத் தனியாகப் பிரிந்து சுயாதீனமாகத் தாங்கள் செயற்படப்போகின்றார்கள் என்று அறிவித்துள்ளனர்.

ஆட்சியைக் கைப்பற்ற அல்லது அதிகாரத்தைத் தக்க வைக்க முயலும் தரப்புடன் தாம் தனித்துப் பேரம்பேசி லாபமீட்டும் முயற்சிக்குச் சாதகமாகவே இந்த ஏற்பாடு என்று கூறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியவுடன் அதிரடி முடிவுகள் எடுக்கப்படும் என்று மத்திய மாகாண எதிர்க் கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சி உறுப்பினருமான சானக ஜலப் பெரும தெரிவித்தார். (உ)

# மியன்மாரின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

## பிரதமர் ரணிலுடனான சந்திப்பில் ஆங்சாங் சூகி கோரிக்கை

மியன்மார் நாட்டில் ஜன நாயகத்தைப் பலப்படுத்துவதே எமக்குள்ள பிரதான சவாலாகும். ஆகவே, நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று அந்த நாட்டின் தலைவி ஆங்சாங்சூகி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஆங் சாங்சூகிக்கு பிரதமர் ரணில் விக் கிரமசிங்க அழைப்பு விடுத்தார்.

'ஒரே கரையோரம் - ஒரே பாதை' என்னும் தொனிப் பொருளின் கீழ் சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்று வரும் மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக உத்தியோகபூர்வவிஜயம்ஒன்றை மேற்கொண்டு சீனா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மியன்மார் நாட்டின் அரசதலைவி ஆங்சாங்



சூகியைச் சந்தித்துப் பேசினார். இதன்போது மேற்கண்டவாறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன.


இதன்போது மியன்மார் தலைவி தனது கோரிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மியன்மார் நாட்டில் ஜன நாயகத்தைப் பலப்படுத்துவதே எமக்குள்ள பிரதான சவாலாகும். ஆகவே நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்து கண்டி மாநகரத்தைப் பார்ப்பதற்கு ஆவலாக உள்ளேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க-

மியன்மார் நாட்டின் ஜன நாயகத்தை உறுதி செய் வதற்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு நாம் தயார். அத்துடன் இதற்கான இலங்கையின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவை விரைவில் மியன்மாருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியளித்தார். மேலும் ஆங்சாங் சூகியை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பும் விடுத்தார். (க)

# நாளை மின் தடை



நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில் கூமாங்குளம், உக்குளாங்குளம், தெற்கிலுப்பைக் குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மடுக்கரை பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# குருநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ. ஆர். வி.) போடப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி, நாளை புதன் கிழமை :

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை - 4 ஆம், 5 ஆம் குறுக்குத் தெருக்கள்.

★ பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை - சிப்பித் தரை வீதி.

**நாளை மறுதினம் வியாழக்கிழமை**

★ காலை 9 மணிமுதல் 11 மணிவரை 3 ஆம் குறுக்குத் தெரு குருநகர்.

★ முற்பகல் 11 மணிமுதல் ஒரு மணிவரை 2 ஆம் குறுக்குத்தெரு, குருநகர்.

பிற்பகல் 2.30 மணிமுதல் 4 மணிவரை - ஜஸ்பிளாண்ட் வீதி. (இ)


# ரயிலுக்கு கல் எறிந்த நால்வர் கைது!

ரயிலுக்கு கல்லெறிந்த இளைஞர்கள் நால்வரை கடுகண்ணாவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடுகண்ணாவை - பலன இடையிலான குகை ஒன்றுக்கு அருகில் கொழும்பு - கண்டி ரயிலுக்குக் கல் எறிந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடுகண்ணாவை பொலிஸார் மற்றும் ரயில் விசேட பாதுகாப்பு நடமாடும் சேவை மூலம் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் பின்னர் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளனர். (எ)

# அரச சேவை முகாமைத்துவத்தை பலப்படுத்த மலேஷியா முழு ஆதரவு



அரச சேவை முகாமைத்துவத்தைப் பலப்படுத்த மலேசிய அரசு பூரண ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மலேசிய பிரதமர் நஜிப் ரஸாக்கிற்கும் இடையில் பீஜிங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட பேச்சின் போது மலேஷிய பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அந்தவகையில் அரச ஊழியர்களுக்கு பயிற்சிகளை வழங்க மலேசிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடையில் இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்துவதன் மூலம் இரண்டு நாடுகளும் பல் வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# புத்தளத்தின் சூழலியற் செயற்கைப் பாதிப்புக்கு தொடர் பிரதிநிதித்துவம் இல்லாமையே காரணம்

## அமைச்சர் ரிஷாத் கூறுகிறார்

புத்தளம், மே 16

புத்தளம் மாவட்டத்தில் பல வந்தமாக வெளியாரால் திணிக்கப்பட்டிருக்கும் சூழலியல் ரீதியான செயற்கைப் பாதிப்புகளுக்குத் தொடர் பிரதிநிதித்துவம் இல்லாமையே பிரதான காரணம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மக்கள் காங்கிரஸின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை கற்பிட்டியில் அங்குரார்ப்பணம் செய்து வைத்த பின்னர் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றிய போதே, இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த கால சிறுபிள்ளைத் தனமான செயற்பாடுகளாலேயே புத்தளம் மாவட்ட நாடாளுமன்றக் கனவு சிதைந்து சின்னாபின்னமாகியது. தேர்தல் காலங்களில் மட்டும் தங்களது தேவைகளுக்காக வருபவர்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எந்தப்பயனும் கிடைக்கப்போவதில்லை.

இந்தத் தவறுகள் மேலும் தொடருமேயானால் சமூகத்தின் இருப்புக்கு ஆபத்தே ஏற்படும். தொடர்ச்சியான இந்தப் பிழைகளை இன்னும் நாம் தொடர்வதற்கு அனுமதிக்கவும் கூடாது; அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் கூடாது.

புத்தளத்தின் தலைமை புத்தளத்தில் பிறந்த ஒரு நேர்மையானவரிடமும் உளத்தூய்மையாகச் செயற்படுபவரிடமும் இறையச்சமுள்ள ஒருவரிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அவ்வாறான



ஒரு தூய பணிக்கு எமது கட்சியின் வளத்தையும் தலைமையின் பலத்தையும் அர்ப்பணித்து செயற்படுவோம்.

நல்ல அரசியல் தலைமைகளை மட்டும் அடையாளங்கண்டு உருவாக்குவதுடன் நின்றுவிடாது அவர்களினூடாக மக்களின் காலடிக்கு அபிவிருத்தியும் சேவையும் சென்றடையக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

புத்தளத்து நேரடி அரசியலில் நான் ஒரு போதும் ஈடுபடப்போவதில்லை. எந்தவொரு தேர்தலிலும் புத்தளத்தை மையமாகக் கொண்டு நான் இறங்கப் போவதில்லை என்பதை மிகவும் தெளிவாகவும் அழுத்தமாகவும் பகிரங்கமாகவும் பல தடவை கூறி இருக்கின்றேன்.

எனினும் 'எங்கள் பணிகளை வேற்றுக்கண்ணோட்டத்திலும் தப்பான எண்ணத்திலும் நோக்குபவர்களே தேர்தலில் இந்த மாவட்டத்தில் நான் குதிக்கப் போகின்றேன் என புரளிகளைக் கிளப்பி வருகின்றனர்.- என்றார்.

# மன்னார் நீதிவானுக்கு அச்சுறுத்தல் வழக்கு நவம்பருக்கு ஒத்திவைப்பு



(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட நீதவானைத்தொலைபேசிமூலம்மிரட்டியமை சம்பந்தமாக அமைச்சர் ஒருவருக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நடைபெறும் வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு முன்பு மன்னார் நகர் கோந்தப்பிட்டிகடற்கரைசம்பந்தமாகஇரு சாராருக்கிடையே நிலவிய வழக்குத் தொடர்பாக வன்னித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், வர்த்தகமற்றும்வாணிபத்துறை அமைச்சருமான ரிசாத் பதியுதீன் அச்சமயம் அவ்வழக்கை விசாரித்த மன்னார் மாவட்ட நீதவான் யூட்சனைத் தொலைபேசியினூடாகப் பேசி அச்சுறுத்தினார்எனத்தெரிவித்து அமைச்சருக்குஎதிராகவழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்குநேற்றுமன்னார் நீதிமன்றில் நீதிவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ் ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அமைச்சர்மன்றில் ஆஜராகியிருந்தார்.

இவ் வழக்கு சம்பந்தமான அறிக்கை சட்டமா அதிபரிடமிருந்து இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-112)

## கைதடி நுணாவிலில் பஸ் - டிப்பர் விபத்து

சாவகச்சேரி, கைதடி நுணாவிலில் நேற்று திங்கட்கிழமை காலை 8.30மணியளவில்யாழ். - வவுனியா தனியார் பஸ்ஸும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸின் முன் பக்கத்தில்சேதம்ஏற்பட்டுள்ளது.

பஸ்ஸில்பயணித்தபயணிகள் எந்தவிதகாயமும் இன்றித்தப்பித்தனர். முன்னால் சென்ற டிப்பர் நுணாவில்வைரவர் கோவில்வீதிப் பக்கமாகத்திருப்ப முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21)



# டிராக்டரைப் பந்தாடியது ரயில் வவுனியா விபத்தில் 2 பேர் பலி!

வவுனியா, மே 16

நேற்று முன்தினம் வவுனியா - புதூர் செல்லும் வீதியிலுள்ள ரயில்வே கடவையில் பயணித்த டிராக்டர் ஒன்றுடன் ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ரயில் பிற்பகல் 1.35 மணியளவில் வவுனியா - புளியங்குளம் - புதூர் ஆலயப்பகுதியிலிருந்து கண்டி வீதிக்கு மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர் பாதுகாப்பற்ற ரயில்பாதையை கடக்கும்போது மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் டிராக்டரின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் மரணமடைந்துள்ளனர்.



புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் ரவீதரன் (வயது 20), ரவீந்திரன் கீர்த்தீபன் (21வயது) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-100)

## ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் வவுனியா அபிவிருத்திக் கூட்டத்தில்!

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பித்த நிலையில் செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் ஒருவரை அக்கூட்டத்தில் இருந்த மாவட்டச்செயலகஅரசஅதிகாரி ஒருவர் அச்சுறுத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டம் வர்த்தக, கைத்தொழில்அமைச்சர் றிசாத்பதியுதீன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான் ஆகியோரின்இணைத்தலைமையில் நடை பெற்றது.

அச்சமயமே, அங்கு செய்தி சேகரிப்புப் பணி யில் ஈடுபட்ட ஊட கவியலாளர் ஒரு வரின் நெஞ்சைப் பிடித்து தள்ளி அவரைக் கூட்டம் நடைபெற்ற மண்டபத்தில் இருந்து வெளி யேற்ற முற்பட்டார் மேற்படி அதிகாரி. அங்கு நின்ற ஏனைய ஊடகவியலாளர்கள் ஒன்று சேர்ந்து அதற்குஎதிர்ப்புத்தெரிவித்தமையை அடுத்து அவர் அதிலிருந்து விலகிச் சென்றுள்ளார்.

இந்த அதிகாரி அண்மையில் வவுனியா, நொச்சிமோட்டைப் பகுதியில் நெல்மூடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-100)



யாழ்ப்பாணம் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நீராவியடியில் உள்ள அதன் கலையரங்கத்தில் வருடாந்தம் நடத்தும் ஐந்து நாள்கள் இயல், இசை, நாடக அரங்க நிகழ்வு கடந்த புதனன்று ஆரம்பமாகியது. நேற்றைய இறுதி நாள் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்


**இரண்டு மணித்தியாலங்களில் 500 ரூபா உழைக்கலாம்**

**அழையுங்கள் - 075 712 8371**



## வேலைவாய்ப்பு

சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வம், அனுபவம் உள்ள துடிப்பான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு.

- கவர்ச்சிகரமான சம்பளம்
- பகுதி நேரமாகவும் வேலை செய்யலாம்

**நேரில் வரவும்**

காலைக்கதிர் பத்திரிகை அலுவலகம்

இல. 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்துக் கல்லூரி முன்பாக) 021 222 2600





யாழ்ப்பாணம் இல.227, 229 கஸ்தூரியார் வீதியிலுள்ள ரூபி ஜுவல்லறி நிறுவனத்தினர், அட்சய திருதியையின்போது நகைகளைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்கள் 10 பேருக்கு பரிசில்கள் வழங்கியுள்ளனர். சீட்டிழுப்பு மூலம் அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவு செய்தபோது எடுக்கப்பட்ட படம் இது. அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் 13 ஆம் திகதிய காலைக்கதிரில் வெளியாகி இருந்தது. (இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள [illegible] நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.